வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer - மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER - ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 14.07.2025 திங்கட்கிழமை இதழ் : 195 பக்கங்கள் : 12

*சீனா - இலங்கை கடல்சார் ஒத்துழைப்பு:*

# மூன்றாம் தரப்பினர் தலையிடக்கூடாது!

## சீன வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்திடம் வலியுறுத்து

கோலாலம்பூர், ஜுலை 14

"சீனா - இலங்கை கடல்சார் ஒத்துழைப்பு இரு நாடுகளுக்கும் பரஸ்பரம் நன்மை அளிக்கும். அது மூன்றாம் தரப்பினரை இலக்காகக் கொண்டதல்ல - மூன்றாம் தரப்பு அதில் தலையிடக்கூடாது" என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துடனான சந்திப்பில் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி வலியுறுத்தியுள்ளார்.



அத்துடன், இந்த சந்திப்பில் இரு தரப்பினரும் சீனாவின் பட்டுப் பாதை திட்டத்தில் இணைந்து செயல்பட இணக்கம் வெளியிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

இரு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் சந்திப்பின்போது, சீனாவின் பட்டுப்பாதை திட்டத்தில் இணைந்து செயல்பட இணக்கம் வெளியிட்டனர். அத்துடன், முக்கியமான கட்டுமான திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதற்கும் (11)

# வடக்கில் 33 மருத்துவமனைகளில் ஒரு தாதியர்கூட சேவையில் இல்லை

*சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ*

யாழ்ப்பாணம், ஜுலை 14

வடக்கு மாகாணத்தில் ஒரு தாதியர்கூட இல்லாத 33 பிராந்திய மருத்துவமனைகள் உள்ளன என்று சுகாதாரம், வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் புதிய தாதியர்களை நியமிப்பதன் மூலம் வெற்றிடங்களை நிரப்ப (11)



# 50,000 பேருக்கு வேலை வாய்ப்பு; நாளை முதல் நேர்முக பரீட்சை!

கொழும்பு, ஜுலை 14

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த 18 முதல் 35 வயதுக்கு உட்பட்ட 50 ஆயிரம் இளையோருக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்கான செயல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நேர்முகத் தேர்வு நாளை செவ்வாய்க் கிழமை முதல் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நாட்டின் அனைத்து பிரதேச செயலகங்களிலும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவாகும் இளையோர் சமுர்த்தி துறையால் நிதியளிக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து தொழில் கல்வி படிப்புகளை தொடர ரூ. 50,000 மதிப்புள்ள முழு உதவித் தொகையை பெறுவார்கள். மேலும், தொழில் முனைவில் ஆர்வமுள்ள பங்கேற்பாளர்களுக்கு வணிக பயிற்சியும் சொந்தமாகத் தொழில் தொடங்க சலுகை (11)

*30 சதவீத தீர்வை வரி:*

## பேச்சு குழு இரு வாரங்களில் அமெரிக்கா செல்கின்றது!

கொழும்பு, ஜுலை 14

அமெரிக்கா விதித்துள்ள 30 சதவீத தீர்வை வரியிலிருந்து நிவாரணம் பெறுவதற்கான பேச்சில் பங்கேற்க பிரதிநிதிகள் குழு அடுத்த இரு வாரங்களுக்குள் அமெரிக்கா செல்லவுள்ளது - என்று இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் மங்கள விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா செல்லவுள்ள பிரதிநிதிகள் (11)

## அனைத்துத் தரப்பினருடனும் இவ்வார இறுதியில் சந்திப்பு

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (11)

*அரியாலை மனித புதைகுழி:*

## காபன் பரிசோதனை குறித்து நீதிமன்றமே தீர்மானிக்கலாம்

*காணாமல்போனோர் பணிமனை*

கொழும்பு, ஜுலை 14

அரியாலை மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளை காபன் பரிசோதனைக்கு உட்படுத்துவதா இல்லையா என்பதை நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும் என்று காணாமல் போனோர் பணிமனை தெரிவித்துள்ளது. அந்தப் பணிமனையின் நிறைவேற்று பணிப்பாளர் ஜே. தற்பரன் இதனை தெரிவித்துள்ளார்.

உடல்கள் எப்போது புதைக்கப்பட்டன என்பதை தீர்மானிப்பதற்கான ஒரு முறையாக காபன் பரிசோதனை பயன்படுத்தப்படுகிறது. இது பயன்படுத்தப்படும் ஒரு முறையாகும். வேறு பொருட்கள் ஆதாரங்கள் இல்லாதபோது இந்த முறை பயன்படுத்தப்படுவது வழமை. (11)

## தோட்ட தொழிலாளரின் சம்பள பிரச்னைக்கு விரைவில் தீர்வு!

*பிரதி அமைச்சர் பிரதீப்*

நுவரெலியா, ஜுலை 14

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான சம்பள விவகாரத்தில் ஜனாதிபதி நேரில் தலையிட்டு வெகுவிரைவில் தீர்வு வழங்குவார் என்று தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா - கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலையில் நடந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம், மக்களுக்கு சேவை வழங்கும் நோக்கிலேயே உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைத்தோம். இதற்கு எவ்வித நிபந்தனையும் இன்றியே சில தரப்புகள் ஆதரவு அளித்தன. ஆட்சி அமைப்பதற்காக நாம் எந்தவொரு டீலிலும் ஈடுபடவில்லை. (11)

## பொலிஸ் புலனாய்வாளர்கள் குடும்பஸ்தர் மீது தாக்குதல்!

கிளிநொச்சி, ஜுலை 14

பொலிஸ் புலனாய்வாளர்கள் என்று தம்மை அறிமுகம் செய்ததுடன், பொலிஸ் என்று எழுதப்பட்ட மேலங்கியும் அணிந்திருந்த நால்வரால் விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர் ஒருவர் பளை பிரதேச மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

பலாத்காரமாக மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்ற அவர்கள் தம்மீது தாக்குதல் நடத்திவிட்டு இடையில் இறக்கி விட்டுச் சென்றனர் என்று பாதிக்கப்பட்ட இளைஞர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த (11)

## வெளிநாட்டு சிகரெட்களுடன் காங்கேசனில் ஒருவர் கைது!

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜுலை 14

இந்தியாவிலிருந்து 700 சிகரெட்களை சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டு வந்த ஒருவர் காங்கேசன் துறையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவிலிருந்து வருகை தந்த சந்தேகநபர் சுங்கத் துறை சோதனைகள் முடிவடைந்து வெளியேறினார். இதன் பின்னர் யாழ்ப்பாணம் மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பொலிஸார் நடத்திய சோதனையிலேயே சட்டவிரோத சிகரெட்களுடன் பிடிபட்டார். (11)

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை இராணுவம்மீது சுமத்த முயற்சி

*பிள்ளையான் எதுவும் கூறவில்லை என்கிறார் உதய கம்மன்பில!*

கொழும்பு, ஜுலை 14

இராணுவத்தினரே குண்டுத் தாக்குதலை நடத்தினர் என்று பிள்ளையான் ஊடாக வாய்மூல சாட்சியத்தை பெறவே இந்த அரசாங்கம் முயற்சிக்கிறது. ஆசாத் மௌலானாவை அரச தரப்பு சாட்சியமாக மாற்றி குண்டுத் தாக்குதலை இராணுவத்தின்மீது சுமத்தவே அரசதரப்பு எதிர்பார்க்கிறது. குண்டுத் தாக்குதல்கள் பற்றி பிள்ளையான் எதுவும் குறிப்பிடவில்லை. அமைச்சர் ஆனந்த விஜயபால குறிப்பிடுவது (11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ. ஒன்றரை கோடி பெறுமதியான கஞ்சா எழுவைதீவில் மீட்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 14

எழுவைதீவுக்கு அண்மை யாக கடற்படை நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையில் சுமார் ஒன்றரை கோடி ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடலில் மிதந்த நிலையில் பொலிதீன் பை ஒன்று மீட்கப் பட்டதாகவும் அதில், 38 கிலோ 700 கிராம் கேரள கஞ்சா இருந்ததாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.

கடற்படையினர் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தமையால் கஞ்சாவை கரைக்கு கொண்டுவர முடியாமல் அதனை கடத்தல்காரர்கள் கடலில் விட்டுச் சென்றிருக்கலாம் என்றும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.



கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா சட்ட நடவடிக்கைக்காக ஊர்காவற்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கட்டுமரம் வலித்தல் போட்டி

வடமராட்சி, ஜூலை 14

அமரர் பொன்னையா செல்லத்துரை 16ஆவது ஆண்டு நினைவாக கட்டப்பட்ட குடத்தனை வடக்கு கடற்றொழிலாளர் சந்தை கட்டட தொகுதி திறப்பு விழாவை முன்னிட்டு கட்டுமரம் வலித்தல் போட்டி நடைபெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை குடத்தனை வடக்கு கடற்கரையில் இந்தப் போட்டி நடைபெறவுள்ளது.

இதில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக 25 ஆயிரம் ரூபாயும் இரண்டாம் பரிசாக 15 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படவுள்ளது. (ஐ-02)

# அமிர்தலிங்கம் நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது!




யாழ்ப்பாணம், ஜூலை 14

நாட்டின் முதலாவது தமிழ் எதிர்க்கட்சி தலைவரான அ. அமிர்தலிங்கத்தின் 36ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.


தமிழர்களின் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரான அ. அமிர்தலிங்கத்தின் 36 ஆவது ஆண்டு நினைவுதினம் வலி. மேற்கு பிரதேச சபைக்கு முன்பாக உள்ள அமரரின் உருவச் சிலையடியில் நடைபெற்றது.

பண்ணாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் அமரரின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதேவேளை, அமிர்தலிங்கம் அறக்கட்டளை நிலையத்தின் ஏற்பாட்டில் மூளாயில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்திலும் நினைவேந்தல் நடைபெற்றது.

இதன்போதும், அமரரின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் வலி மேற்கு பிரதேச சபை தவிசாளர் ச. ஜயந்தன், பிரதேச சபை உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# சம்பந்தனின் நினைவுதினம் கிளிநொச்சியில் அனுஷ்டிப்பு



கிளிநொச்சி, ஜூலை 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெருந்தலைவர் அமரர் இரா. சம்பந்தனின் முதலாம் ஆண்டு நினைவு தினம் கிளிநொச்சியில் நேற்றைய தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, இரா. சம்பந்தனின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து, மரியாதை செலுத்தப்பட்டது.

இதில், உரையாற்றிய சிறீதரன் எம். பி.,

தன் இறுதிக்கணம் வரை தமிழ்த் தேசியத் தளத்தில் பயணித்த அரசியல்வாதியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இராஜவரோதயம் சம்பந்தனின் வெற்றிடம் ஈழத்தமிழர்களின் இன விடுதலை நோக்கிய அறவழிப் போராட்டப் பயணத்தில் கால வெளியால் நிரப்ப முடியாதது என்று கூறினார். (ஐ)

# இதழ் வெளியீடும் கண்காட்சியும்!

யாழ்ப்பாணம், ஜூலை 14

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஊடக கற்கை கழகத்தின் 'நிழலும் நிஜமும்' இதழ் வெளியீடும் கண்காட்சியும் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பதில் அதிபர் திருமதி வதனி தில்லைச் செல்வன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய வழிகாட்டல் ஆலோசனை ஆசிரிய ஆலோசகர் திருமதி பிரேமலோஜனி சுதேஸ்குமார் டான் தொலைக்காட்சி அரசியல் நிகழ்ச்சி தயாரிப்பாளர் பு.சுலக்ஷன், மூத்த பத்திரிகையாளர் தர்மினி பத்மநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-02)

# வவுனியா மாநகர பகுதியில் கடைகள் சில அகற்றப்பட்டன

வவுனியா, ஜூலை 14

வவுனியா மாநகர சபையால் ஏ-9 வீதியின் ஓரங்களில் அமைக்கப்பட்ட சில கடைகள் அகற்றப்பட்டன.

தமிழர்களுக்கு சொந்தமான கடைகளே இவ்வாறு அகற்றப்பட்டன என்று பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இவ்வாறு அகற்றப்பட்ட கடைகளிலிருந்த பழங்கள், மரக்கறிகள் டிராக்டரில் ஏற்றிச் செல்லப்பட்டன. மாநகர சபை வளாகத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட அவற்றை அங்கிருந்த ஊழியர்கள் சாப்பிட்டதுடன், அவற்றை கொண்டும் சென்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

வாழ்வாதாரத்துக்காக விற்பனை செய்தவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை ஊழியர்கள் இவ்வாறு செய்தமைக்கு பலரும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இது விடயத்தில் சம்பந்தப்பட்ட ஊழியர்களின் செயல்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. (ஐ-10)

# கன்னிமார் கௌரி அம்பாள் ஆலயத்தில் பக்திபூர்வமாக நடந்தது கும்பாபிஷேகம்





யாழ்ப்பாணம், ஜூலை 14

குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை-07 மணி முதல் காலை-08.10 மணி வரையுள்ள சுபவேளையில் பக்திபூர்வமாக நடைபெற்றது.

புன்னாலைக்கட்டுவனை சேர்ந்த சிவசிறீ கிருஷ்ண பிரணவ குருக்களை பிரதிஷ்டா பிரதம குருவாகக் கொண்டு ஆலயப் பிரதமகுரு சிவசிறீ சி. கிருஷ்ணசாமிக் குருக்களின் நெறிப்படுத்துதலில் மகா கும்பாபிஷேகம் நடந்தேறியிருந்தது.

ஆலயத்தின் மகா கும்பாபிஷேகக் கிரியைகள் கடந்த வியாழக்கிழமை அதிகாலை 05.30 மணியளவில் ஆரம்பமானது. நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 09.20 மணியளவில் அடியவர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவம் ஆரம்பமாகி மாலை 04 மணி வரை நடைபெற்றிருந்தது. (ஐ)

# சுற்றுலாவிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை!

## கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதிகளுக்கு சுற்றுலா செல்லும் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

கடல் போக்குவரத்து சேவை வழங்கும் படகுகளின் தரம் மற்றும் முன் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் தொடர் கண்காணிப்பில் ஈடுபடுமாறு பொலிஸ், கடற்படையினருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

நெடுந்தீவை சேர்ந்த தனியார் ஒருவருக்கு சொந்தமான சுற்றுலா பயணிகளை ஏற்றும் சிறிய ரக படகில் நெடுந்தீவுக்கு சென்று திரும்பும்போது படகில் ஏற்பட்ட கோளாறால் படகு மூழ்கியது. இதன்போது, பயணிகள் 12 பேர் 2 பணியாளர்கள் என 14 பேர் உயிராபத்தின்றி மீட்கப்பட்டனர்.

குறித்த சுற்றுலா படகில் இருந்து வெள்ளைக்கொடி காட்டுவதை அவதானித்த அவ்வழியே சென்ற நெடுந்தீவு தனியார் படகினர் விரைந்து செயல்பட்டு கடலில் மூழ்கியவர்களை காப்பாற்றினர். கடற்படையினரும் முழு வீச்சுடன் செயற்பட்டுள்ளனர். இவர்களுக்கு எனது நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடல் பயணத்தின்போது பின்பற்ற வேண்டிய முன்பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் உரிய அறிவுறுத்தல்கள் ஏற்கனவே விடுக்கப்பட்டுள்ளன. அவை முழுமையாக பின்பற்றப்பட வேண்டும் - என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 14.07.2025 திங்கட்கிழமை ඊළනාඩු
விசுவாவசு வருடம், ஆனி 30

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## வடக்கின் தலைமைகளுக்கு இது தெரியாதா?

"வடக்கு மாகாணத்தில் 33 மருத்துவமனைகளில் ஒரு தாதிகூட இல்லை", என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருக்கிறார். "இந்தப் பிரச்னையை தீர்ப்பதற்கு அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுக்கும்", என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். ஒரு குறிப்பிட்ட காலம் வடக்கு மாகாண சபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் தான் இருந்தது. வடக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசிய கட்சிகள் - தமிழ்த் தேசியம்சாரா கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி பல பாராளு மன்ற உறுப்பினர்கள் இருந்திருக்கின்றனர். இதற்கும் அப்பால் தமிழர்கள் அமைச்சர்களாகவும் இருந்திருக்கின்றனர். இவர்கள் எவரும் ஏன் இந்த விடயத்தை வெளிக்கொணரவில்லை - தெரியாதா அல்லது மக்களின் அடிப்படையான பிரச்னைகளை ஆராய்வதில்லையா? வடக்கு மாகாணத்தில் நிலவும் தாதியர் பற்றாக்குறையைக்கூட, தென்னிலங்கையிலிருந்து ஓர் அரசியல்வாதி வந்துதான் எடுத்துரைக்க வேண்டுமா?

தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறிக்கொள்ளும் கட்சிகள் அரசியல் தீர்வு, அனைத்துலக நீதி, சர்வதேச அழுத்தம் என்றவாறான சில சொற்களை உச்சரிப்பதற்கு அப்பால் தமிழ் மக்களின் அன்றாட பொருளாதார, கல்வி, சுகாதார பிரச்னைகள் தொடர்பில் பேசுவதில்லை. ஆகக் குறைந்தது மக்களின் அடிப்படையான வாழ்வாதார பிரச்னைகள் தொடர்பில் தங்களுக்கு பொறுப்பு இருக்கிறது என்பது தொடர்பில் சிந்திப்பதுகூட இல்லை.

போரில் அழிவுற்ற ஒரு சமூகத்தை மீளவும் நம்பிக்கையுடன் வாழவைப்பது என்பது வெறும் சுலோகங்களில் தங்கியிருக்கவில்லை. மாறாக, அவர்கள் தொடர்ந்தும் இந்த நிலத்தில் வாழ்வதற்கான நம்பிக்கையை கொடுப்பதுடன் தொடர்பானது. அவ்வாறான நம்பிக்கையை தமிழ்த் தேசியம் என்னும் ஒரு சொல்லால் உறுதிப்படுத்திவிட முடியாது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் கணிசமான தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியை நோக்கி சென்றமைக்கான அடிப்படையான காரணத்தை இந்தப் பின்புலத்திலிருந்துதான் புரிந்து கொள்ள வேண்டும். உள்ளூராட்சித் தேர்தலின்போது தேசிய மக்கள் சக்தியை ஒரு பிரதான எதிரியாகக் காண்பித்து அவர்களுக்கு வாக்களிக்கக்கூடாது என்னும் அடிப்படையில் துவேச பிரசாரங்களின் மூலம்தான் கட்சிகள் ஒவ்வொன்றும் தங்களுக்கான வாக்குகளை சேகரித்திருந்தன. உண்மையில், அது ஓர் இனவாத அணுகுமுறைதான்.

தென்னிலங்கை ஆட்சியாளர்களின் கடும் போக்குகள் காரணமாகவே தமிழ் கட்சிகள் அரசியலில் சீவிக்க முடிகிறது. ஒருவேளை சில அடிப்படையான விடயங்களில் தென்னிலங்கை அரசாங்கம் மாற்றங்களை காண்பிக்குமானால் பின்தங்கிய பகுதிகளில் வாழும் ஏழைத் தமிழ் மக்கள் பெருமளவில் தமிழ் கட்சிகளிலிருந்து விலகிவிடுவர். ஆனால், இதனை உணராமல் இருப்பது தென்னிலங்கை அரசியலில் பிரச்னையாக இருக்கிறது.

தமிழ் மக்களுக்கான அரசியல் என்பது தமிழ் மக்களை சொந்த நிலத்தில் கால் பதித்து எழச் செய்வது. அனைத்துத் துறைகளிலும் மக்கள் முன்னோக்கிச் செல்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது. இதற்கு அதிகாரம் தேவை என்பது நியாயமானது. ஆனால், அதிகாரம் என்பது மயிலே மயிலே இறகு போடு என்னும் விடயமல்ல. இருப்பதை உச்சபட்சமாகப் பன்படுத்திக் கொண்டு அதேவேளை புலம்பெயர் கொடையாளர்கள், சர்வதேச தொண்டு நிறுவனங்கள் என அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்தி மக்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டும். அரசாங்கத்துடனும் அபிவிருத்திசார் நடவடிக்கைகளில் சுமுகமான உரையாடலை மேற்கொள்ள வேண்டும்.

## 5 வருடத்தில் 5 ஆயிரம் வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறும் நிலைமை!

கொழும்பு, ஜூலை 14

எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் மேலும் 5 ஆயிரம் வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறும் நிலை காணப்படுவதாக சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 5 ஆண்டுகளில் சுமார் 5,000 மருத்துவ நிபுணர்கள் நாட்டைவிட்டுச் சென்றுள்ளனர். வரிவிதிப்பு தொடருமானால், எதிர்வரும் 5 ஆண்டுகளில் மேலும் 5,000 பேர் நாட்டை விட்டு செல்லும் அபாயம் உள்ளது. மருத்துவ கற்கை நெறியை பூர்த்தி செய்பவர்கள் அரச மருத்துவ மனைகளில் இணைந்து கொள்ளாது இளைய மருத்துவர்கள் நேரடியாக வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான அபாயம் அதிகரித்து வருகிறது.

வெளிநாட்டில் நிபுணத்துவ பயிற்சிக்குச் செல்லும் வைத்தியர்கள் மீண்டும் திரும்பாமல் ஐரோப்பிய நாடுகளில் தங்கியிருக்கும் நிலைமையும் காணப்படுகின்றது.

களுத்துறை போதனா வைத்திய சாலை போன்ற இடங்களில் நிலையான உரிய வைத்திய நிபுணர்களை நியமிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வருடத்திற்கு ரூ. 50 இலட்சம் சம்பளம் பெறுபவருக்கு ரூ. 9 இலட்சம் ருபாய் வரை வரி அறவிடப்படுகின்றது. இது மிக அதிகமான வரி சுமையாக அமைந்துள்ளது.

கல்வி, சுகாதாரம், அத்தியாவசியப் பொருட்கள் ஆகியவற்றுக்கு மறைமுக வரிகளாகவும் பெரும் தொகையை செலவழிக்கிறார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது குறைந்த வரி வீதமும் நிபுணர்கள் மீது உயர்ந்த வரி வீதமும் விதிக்கப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியம் மின்சாரம் கட்டணத்தை மேலும் அதிகரிக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது.

நிபுணர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவது, நாட்டின் மனிதவள முதலீட்டுக்கே நேரடி பாதிப்பாக அமையும்.

கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் மீட்கும் திட்டமின்றி, பழைய விநியோகச் சுழற்சியை மட்டுமே நம்பும் அரசாங்கம், இளம் நிபுணர்கள் வெளியேறுவதால் தீவிர பொருளாதார சுழற்சி பாதிப்புக்கு உள்ளாகும்- என்றார். (அ)

## பாதுகாப்பு குறைப்பால் நடமாட்டத்தை மட்டுப்படுத்தினார் மகிந்த ராஜபக்ஷ!

கொழும்பு, ஜூலை 14

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பைக் குறைத்தமையால் மகிந்த ராஜபக்ஷ தனது நடமாட் டத்தை குறைத்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் வெளியான அந்த அரசியல் பத்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது: -

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது பயணத்தை மட்டுப்படுத்தியுள்ளார். அண்மையில் அவரது பாதுகாப்புப் பணியாளர்கள் மேலும் குறைக்கப்பட்டுள்ளனர். இரண்டு சாரதிகள் மட்டுமே உள்ளனர். எனவே, அவருக்கான பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வது எளிதல்ல.

பயணக் கட்டுப்பாடுகள் குறித்து அந்தப் பக்கத்தில் இருந்து எமக்கு கிடைத்த செய்திகளின்படி இத்தகவல் எமக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது பாதுகாப்புக்காக சுமார் 108 மெய்ப் பாதுகாவலர்களை கொண்டிருந்தார்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் மெய்ப்பாதுகாவலர்களின் எண்ணிக்கை 60 ஆகக் குறைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. அந்த எண்ணிக்கையில் ஏழு பேர் குறைக்கப்பட் டுள்ளதாகவும் தற்போது தகவல்கள் பரவி வருகின்றன.

இதற்கிடையில், முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது சுயசரிதையை எழுதத் தயாராகி வருவதாக அரசியல் பரப்பில் வதந்திகள் பரவி வருகின்றன - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வீதிப் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

மக்களின் நீண்ட கால கோரிக்கைக்கு அமைவாக மானிப்பாய் சந்தியிலிருந்து இராஜகாரியர் வீதி முழுமையாக பிரதேச சபை நிதியில் புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

200 மீற்றர் முழுமையாகவும் 400 மீற்றர் பகுதி அளவிலும் மொத்தமாக 600 மீற்றர் நீளமான வீதிப் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்குரிய ஆரம்ப நிகழ்வு பிரதேச சபை தவிசாளர், பொதுமக்கள் பங்களிப்புடன் பிரதேச சபை உறுப்பினர் க. உஷாந்தனால் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (எ)



## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை - 14 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம் - ஆனி 30
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : சதுர்த்தி




**மேடம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. நேர்மறை எண்ணங்கள் வரும்.

**கடகம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். தாய் வழியில் ஆதரவுப் பெருகும். சக ஊழி யர்கள் உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**சிம்மம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள். அமோகமான நாள்.

**கன்னி**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற் கொள்வீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் இருந்த பிரச்னைகள் விலகும்.

**துலாம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். புதுவேலை கிடைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு கூடும். தைரியம் கூடும்.

**தனுசு**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை தி புது நட்பு மலரும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். தடைகள் உடைபடும்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். ரகசியங்களை வெளியிட வேண்டாம். இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்பட வேண்டும்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது.

**மீனம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வீட்டை அழகுப்படுத்துவீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

# வவுனியாவில் வன்முறை; ஒருவர் பலி 5 பொலிஸார் காயம், 3 வாகனங்கள் சேதம்

வவுனியா, ஜூலை 14

வவுனியா, கூமாங்குளம் மதுபானசாலை அருகில் ஒருவர் மரணமடைந்ததைத் தொடர்ந்து இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் 5 பொலிஸார் காயமடைந்ததுடன், பொலிஸாரின் 3 வாகனங்களும் சேதமடைந்தன.



கூமாங்குளம் பகுதியில் கடந்த 11 ஆம் திகதி இரவு வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் வீதியோரமாக விழுந்து உயிரிழந்தார். பொலிஸார் விரட்டிச் சென்றமையால் குறித்த நபர் உயிரிழந்தார் என பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு நேற்று முன்தினம் காலை தடவியல் பொலிஸார் வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன் நீதிபதியும் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

இது தொடர்பில் வவுனியா பொலிஸார் சிறப்பு குழுக்களை நியமித்து பல்வேறு கோணங்களில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-10)

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க யாழ்ப்பாணத்தில் போராட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

"விடுதலை பெருவிருட்சம் வேரூன்றி தளைத்திட ஒருகுவளை நீர் உவந்து உறவுகளை விடுவிப்போம்" எனும் கருப்பொருளில் யாழில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



தமிழ் அரசியல் கைதியான விக்னேஸ்வரநாதன் பார்த்தீபன், 17 வயதில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் வாடிக் கொண்டிருக்கின்றார்.

இவரின் நீண்டகால பிரிவுத் துயர் தாங்காது, தாய் தந்தை இருவரும் உயிர்நீத்த நிலையில், பெற்றோரின் இறுதிச் சடங்குகளுக்கு ஓர் ஆயுள் தண்டனை கைதியாக கைவிலங்குடன் கொண்டுவரப்பட்டு சிதைகளுக்கு கொள்ளியிட்ட பின்பு மீண்டும் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தார்.

பார்த்தீபனின் தாயாரான அமரர் விக்னேஸ்வரநாதன் வாகீஸ்வரியின் மூன்றாமாண்டு நினைவேந்தல் நாளான நேற்று முன்தினம் யாழ்ப்பாணம்- திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில், பார்த்தீபன் உட்பட்ட சக தமிழ் அரசியல் கைதிகள் உயிர்ப்புடன் விடுதலை பெற்று குடும்பங்களுடன் இணைய வேண்டுமென்ற பிரார்த்தனையுடன்,

போராட்டம் ஒன்று "குரலற்றவர்களின் குரல்" அமைப்பினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அதாவது, குடும்பத்தின் உற்ற உறவுகளை இழந்தும் பிரிந்தும் நீண்ட நெடுங்காலங்களாக சிறைத்தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் முகமாக "விடுதலை பெருவிருட்சம் வேரூன்றி தளைத்திட ஒரு குவளை நீர் உவந்து உறவுகளை விடுவிப்போம்!" எனும் கருப்பொருளில், சமூக ஆர்வலர்களின் கரம் இணைத்து போராட்டத்தை தொடரவுள்ளனர்.

இப்போராட்டத்தில் ஒவ்வொருவரும் தத்தமது வீடுகளிலிருந்து ஒரு குவளை தண்ணீரை பொதுக் குவளைக்கு உவந்தளிப்பதன் மூலம், நாட்டப்படும் "விடுதலைப் பெருவிருட்சம்" வேரூன்றி தளைத்திட உங்களது பங்களிப்பையும் அர்ப்பணிக்க முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (எ-05)

# எல்லை தாண்டி மீன்பிடித்த 7 இந்திய மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 14

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 07 இந்திய மீனவர்கள், கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து நேற்று முன்தினம் காலை இழுவைப் படகில் மீனவர்கள் வந்தனர்.

காங்கேசன்துறை வடமேற்கு கடற்பரப்பில் இவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது ஒரு படகையும் அதிலிருந்த ஏழு மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்தனர்.

கைதான மீனவர்கள் படகுடன் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு கொண்டுவரப்பட்டனர்.

முதற் கட்ட விசாரணைக்கு பின்னர் மீனவர்கள் ஏழு பேரும் படகுடன் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தில் வைத்து யாழ்ப்பாணம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. (எ)

# நீதம் சட்ட இதழின் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை மற்றும் யாழ். பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கம் இணைந்து முன்னெடுத்த நீதம் சட்ட இதழின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற இந்த வெளியீட்டு விழாவில், உயர் நீதிமன்ற நீதியரசர் குமுதினி விக்கிரமசிங்க பிரதம விருந்தினராகவும் யாழ்ப்பாணம் சிவில் மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி சிவசுப்பிரமணியம் ரகுராம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் கோசலை மதன் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் விருந்தினர்களாக கலந்து கொண்டனர். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவின் வரி விதிப்பு:

# வருமான இழப்பை ஈடுசெய்ய ஐ. எம். எவ்வுடன் பேச முடிவு!

கொழும்பு, ஜூலை 14

**எதிர்வரும் ஓகஸ்ட் 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், அமெரிக்கா விதித்த 30 வீத வரியால் ஏற்படும் வருமான இழப்பை ஈடுசெய்ய எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் (ஐ. எம். எவ்.) இலங்கை விவாதிக்கும் என்று திறைசேரி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

அமெரிக்காவின் செயல்பாட்டால் சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட வரி வருமான இலக்குகளை நாடு அடைய முடியாமல் போகலாம்.

எனவே, இந்த சூழ்நிலையின் விளைவுகள் குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் விவாதிக்க வேண்டிய அவசியம் உள்ளது என்று திறைசேரியின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இலங்கையிலிருந்து சுமார் 40 சதவீத ஆடைகள் அமெரிக்கச் சந்தைக்கு அனுப்பப்படுவதால், ஆடைத் துறைக்குச் சலுகைகளைப் பெறுவது குறித்து அமெரிக்க வர்த்தக பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களை நடத்த உத்தேசித்துள்ளதாக, திறைசேரியின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், இந்தப் பேச்சுகள் தொடர்பில் திகதி நிர்ணயிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கொள்கை, பேச்சுகளல்ல செயலே முக்கியமானது!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஜூலை 14

கொள்கைகள் மற்றும் பேச்சுகளை விட செயலுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், வரையறுத்த அரச நிதி இருப்பை அங்கீகரித்துக் கொண்டு, நகர்ப்புற சீர்திருத்தம், முதலீட்டாளர் வசதி போன்ற விநியோக பக்கம் சார்ந்த பிரச்னைகளுக்கு தீர்வுகளை வழங்க வேண்டும்.

நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஆதரிக்க வேண்டியம். ஊழலை கட்டுப்படுத்த முழுமையான டிஜிற்றல் மயமாக்கலுக்கும் எதிர்க்கட்சி தலைவர் இதன்போது அழைப்பு விடுத்தார்.

அவசர சீர்திருத்தங்கள் இல்லாவிட்டால் 2028 ஆம் ஆண்டில் ஏற்படப் போகும் பொருளாதார நெருக்கடி குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு எச்சரிக்கை விடுத்தார். (ஐ)

# ராகமை துப்பாக்கிச்சூட்டுக்கு உடந்தையாக இருந்தவர் கைது

கொழும்பு, ஜூலை 14

கம்பஹா - ராகமையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துக்கு உடந்தையாக இருந்த நபர் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராகமை பொலிஸ் பிரிவின் விஜித மாவத்தை பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைதான சந்தேக நபர் ராகம, பட்டுவத்த பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவராவர். கைதின் போது, சந்தேகநபரிமிருந்து 50 கிராம் 600 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாரின் விசாரணையில் கைதானவர் கடந்த 3ஆம் திகதி ராகமையில் ஆர்மி உபுல் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். இவர் நீதிமன்றில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட கணேமுல்லை சஞ்சீவவின் நெருங்கிய நண்பர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிரமிட் திட்ட பரவலுக்கு எதிரான விழிப்புணர்வு வாரம் இன்றுமுதல்

கொழும்பு, ஜூலை 14

தடை செய்யப்பட்ட பிரமிட் திட்டங்களின் பரவலுக்கு எதிரான தேசிய விழிப்புணர்வு வாரம் இன்று முதல் எதிர்வரும் 18ஆம் திகதி வரை கடைப்பிடிக்கப்படவுள்ளது.

"பெரும் கவலையின் உச்ச கட்டம் சூழ்ச்சியான பிரமிட் திட்டம்" என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை முன்னெடுக்க இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

நிதி அமைப்பின் உறுதிதன்மையை பேணுவதற்கும் நிதி நுகர்வோரின் நல்வாழ்வை மேம்படுத்தும் மத்திய வங்கியின் செயல்பாடுகளுக்கு அமைய தடை செய்யப்பட்ட பிரமிட் திட்டங்கள் மற்றும் அவை தனிநபர்களுக்கும் ஒட்டுமொத்த பொருளாதாரத்துக்கும் ஏற்படுத்தும் குறிப்பிடத்தக்க அபாயங்கள் குறித்து பரவலான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த தேசிய நிகழ்ச்சியின் இலக்காகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வேலையில்லா பிரச்னை 3.8 சதவீதமாக குறைந்தது

கொழும்பு, ஜூலை 14

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் நாட்டில் வேலையின்மை 3.8 சதவீதமாகக் குறைந்துள்ளது என்று ம்க்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறை தெரிவித்துள்ளது.

2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நாட்டில் வேலையின்மை விகிதம் 4.5 சதவீதமாக இருந்தது. மேலும், 2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 47.1 சதவீதமாக இருந்த தொழிலாளர் பங்களிப்பு விகிதம் 2025ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 49.7 சதவீதமாக அதிகரித்துள்ளது.

மேலும், நாட்டில் மொத்த வேலையில் உள்ளவர்களில் 26.8 சதவீதம் பேர் விவசாயத் துறையில் பணிபுரிகின்றனர். இதே நேரத்தில், தொழில்துறை துறையில் பணிபுரிபவர்களின் எண்ணிக்கை 25.7 சதவீதம் ஆகும்.

அதிக எண்ணிக்கையிலானவர்கள் சேவைத் துறையில் பணிபுரிகின்றனர். இது 47.6 சதவீதம் ஆகும் என்று மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறை தெரிவித்துள்ளது.

புதிய கல்வி சீர்திருத்தம்:

# மாகாண, மத்திய அரசுகளிடையே சரியான ஒருங்கிணைப்பு அவசியம்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய



கொழும்பு, ஜூலை 14

புதிய கல்வி சீர்திருத்த நடவடிக்கைகளின்போது மாகாண மற்றும் மத்திய அரசுக்கிடையில் சரியான ஒருங்கிணைப்பு இருக்க வேண்டும் என்று கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்வி சீர்திருத்தம் தொடர்பாக மாகாண, வலய, கோட்ட மட்ட கல்வி - நிர்வாக அதிகாரிகளை தெளிவுபடுத்துவதற்கான தெளிவூட்டல் கருத்தமர்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "தற்போதுள்ள கல்வி முறை மாற்றப்பட வேண்டும் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்கிறோம். அதற்காக இந்த சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக தற்போது இருக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும், அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டும், நிர்வாக கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும், டிஜிற்றல்மயமாக்கலையும் மேற்கொள்ள வேண்டும்.

மிக முக்கியமாக இந்த சீர்திருத்தத்தை தனித்தனியாகப் பார்க்க வேண்டாம், ஒட்டுமொத்த செயன்முறையிலும், அமைப்பிலும் இங்கு சீர்திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது. எப்போதும் இந்த நாடு வளர்ச்சியடைந்துவரும் நாடு என்று மட்டும் கூறினால் போதாது, அந்த முறையை மாற்ற வேண்டும். அதை நாம்தான் செய்ய வேண்டும்.

இதனை மாற்ற வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. அதற்காக ஆசிரியர்கள் மட்டுமல்ல நிர்வாக துறையினர், பெற்றோர்கள் உட்பட அனைவரும் ஈடுபட வேண்டும். இந்த சீர்திருத்தத்தைப் பற்றி சரியாக அறிந்து கொள்ள வேண்டும்.

பிள்ளைகள் பாடசாலையில் இருந்து வெளியேறும் போது பல்கலைக்கழகம், உயர்கல்வி அல்லது தொழில்நுட்பக் கல்வி மூலம் முன்னேறிச் செல்ல இதன் மூலம் வழியமைக்கப்படுகிறது. நாட்டை முன்னேற்ற வேண்டுமானால் கட்டாயமாக கல்வியில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். அதேபோல் இந்த செயன்முறையில் அரச சேவைக்குரிய இடமாற்றங்களை சரியான முறையில் மேற்கொள்ள வேண்டும். ஆசிரியர், அதிபர்களின் இடமாற்றங்களை சரியான முறையில் சமப்படுத்த வேண்டும்.

மாகாண அளவில் ஆசிரியர், அதிபர் பிரச்னைகளைத் தீர்க்க தேவையான நடவடிக்கைகளை மாகாண சபை மூலம் விரைவாக மேற்கொள்ள வேண்டும். அதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய சுற்றறிக்கைகள் மற்றும் சட்ட திருத்தங்களை அமைச்சு மூலம் மேற்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். தேசிய பாடசாலைகள், மாகாண பாடசாலைகள் என பிரித்துப் பார்க்க வேண்டாம். அனைத்து பாடசாலைகளும் நமதே, நமது பிள்ளைகள்தான் இருக்கிறார்கள் - என்றார். (ஐ)

# கெஹலிய வழக்கின் ஆவண அச்சிடல் செலவு ரூ. 8.6 இலட்சம்

கொழும்பு, ஜூலை 14

போலி இம்யூனோகுளோபுலின் குப்பிகளை இறக்குமதி செய்தமை தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய உட்பட 12 பேர் மீதான வழக்கில் 2 ஆயிரம் பக்கங்களுக்கும் அதிகமான ஆவணங்களை அச்சிடுவதற்கான செலவை ஏற்க குற்றப் புலனாய்வுத் துறை ஒப்புக்கொண்டுள்ளது.

இந்த ஆவணத்தை அச்சிடுவதற்கான மொத்த செலவு சுமார் 15 இலட்சம் ரூபாய் என அரசு அச்சகத் துறை முன்னதாக மதிப்பிட்டிருந்தது. எனினும், இரு தரப்பு பேச்சுகளை தொடர்ந்து இந்தத் தொகை 8 இலட்சத்து 66 ஆயிரத்து 565 ரூபாயாக குறைக்கப்பட்டதாக வழக்குத் தொடுப்பவர் தரப்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹகம தெரிவித்துள்ளார். (ஐ)

# பியூமியின் மகன் கைது

கொழும்பு, ஜூலை 14

பிரபல சிங்கள திரைப்பட நடிகை பியூமி ஹன்சமாலியின் மகன் நேற்று கைது செய்யப்பட்டார்.

மோட்டார் வாகன விபத்தின் பின்னர் குழு ஒன்றுடன் மோதல் ஏற்பட்டதாகவும் இதன் போது ஒருவரை கடுமையாக தாக்கினார் என்ற குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்து ராஜகிரிய - கலபலுவாவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான நபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பியூமி ஹன்சமாலியின் மகனை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கான வரியும் எம்மீது தாக்கம் செலுத்தும்

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவுறுத்து

கொழும்பு, ஜூலை 14

**இந்தியாவுக்கு எந்தளவு வரி அறிவிக்கப்படவுள்ளது என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்தியாவுக்கு விதிக்கப்படும் வரியும் எமக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த விவகாரத்தில் அரசாங்கத்தின் அசமந்த போக்கால் முழு நாடும் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.**

ஆசியாவில் இலங்கை மாத்திரமே அமெரிக்காவுடன் தீர்வை வரி தொடர்பில் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளதென பிரதி அமைச்சர் அனில் ஜயந்த தெரிவித்திருந்தார். அது மாத்திரமின்றி இரு நாடுகளும் இணைந்து கூட்டு அறிக்கையொன்றை வெளியிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. பேச்சுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதாகவும் தொடர்ந்தும் தெரிவித்து வந்தனர். 15 சதவீத வரி குறைப்பை பெற்றுக் கொண்டு ஆடை தொழிற்துறையை பாதுகாக்க முடியும் என்றும் உறுதியளித்தனர்.

ஆனால், இவை அனைத்தும் பொய் என்பதை நிரூபிக்கும் வகையில் அமெரிக்காவால் இலங்கைக்கு 30 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இலங்கைக்கு 30 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளபோதிலும், பிலிப்பைன்ஸ், வியட்நாம் போன்ற நாடுகளுக்கு 20 சதவீதம் மாத்திரமே வரி விதிக்கப்பட்டுள்ளது. 44 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக வரி குறைக்கப்பட்டுள்ள போதிலும், பிலிப்பைன்ஸ், வியட்நாம் போன்ற நாடுகள் எம்மை விட குறைவான வரி வீதத்தைப் பெற்றுக் கொண்டமையால் அது அமெரிக்க ஏற்றுமதி சந்தையில் எமக்கு பெரும் சவாலாக அமையும்.

ஏனைய நாடுகள் தொடர்பில் எந்தவொரு தகவலையும் தெரிந்து கொள்ளாமல் இலங்கை மாத்திரமே பேச்சுகளில் ஈடுபட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். அரசாங்கத்தின் அசமந்த போக்கால் ஏற்பட்டுள்ள இந்த நிலைமை குறித்து அனைவரும் கவலையடைந்துள்ளனர்.

இந்த நிலைமையை முகாமைத்துவம் செய்வதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. இவற்றுக்கு மத்தியில் இந்தியாவின் நிலவரம் என்ன என்பது இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. இந்தியாவுக்கு எந்தளவு வரி அறிவிக்கப்படவுள்ளது என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் – என்றார். (ஐ)

# நண்பர்களிடையே மோதல் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

## மற்றொருவர் காயம்

கொழும்பு, ஜூலை 14

மது அருந்தியபோது நண்பர்களிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார்.

கம்பஹா, கம்புருபிட்டிய பொலிஸ் பிரிவின் மஹேன பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், உயிரிழந்தவர் யஹல கொடை பகுதியை சேர்ந்த 40 வயது நபராவார். காயமடைந்தவர் கரபுடுகல பகுதியை சேர்ந்த 42 வயது நபராவார்.

நண்பர்கள் சேர்ந்து மது அருந்தியபோது அவர்களிடையே மோதல் ஏற்பட்டுள்ளது. இதில், ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார். உயிரிழப்பை ஏற்படுத்திய சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளார் என்று கூறப்படுகிறது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# உரிமையாளரை தாக்கி நகைகள் கொள்ளை!

கொழும்பு, ஜூலை 14

வீட்டின் உரிமையாளரை பொல்லால் தாக்கி காயப்படுத்தி விட்டு நகைகள் கொள்ளையிடப்பட்டன.

2 சங்கிலிகள், மோதிரம், காப்பு, பென்ரன் மற்றும் பணம் என சுமார் 12 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் இவ்வாறு கொள்ளையிடப்பட்டன.

அநுராதபுரம் – திறப்பனை நகரத்தில் நள்ளிரவு நேரம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், படுகாயமடைந்த நபர் அநுராதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பஸ்ஸுக்காக காத்திருந்தவர் பேருந்து மோதி உயிரிழந்தார்!

பேருந்துக்காக காத்திருந்த மூதாட்டி பஸ் மோதியதில் உயிரிழந்தார்.

காலி – பத்தேகம பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பேருந்து தரிப்பிடத்தில் தனியார் பேருந்து ஒன்றே இந்த விபத்தை ஏற்படுத்தியது. விபத்தில் காயமடைந்தவர் காலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும், அவர் அங்கு உயிரிழந்தார்.

இந்த சம்பவத்தில் காலி – பத்தேகமவை சேர்ந்த 78 வயது மூதாட்டியே உயிரிழந்தவராவார். (ஐ)

# தவறி விழுந்து தொழிலாளி உயிரிழப்பு!

கண்டி, ஜூலை 14

மாடி கட்டடத்தில் கட்டுமான பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளி தவறி விழுந்து உயிரிழந்தார்.

கண்டி – கம்பளை பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், அதே இடத்தைச் சேர்ந்த 58 வயது நபரே உயிரிழந்தார்.

கட்டட வேலையில் ஈடுபட்டிருந்த போது கால் தவறி கீழே விழுந்தார் என்றும் அவரை சக பணியாளர்கள் மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். எனினும் அவர் உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# முன்னாள் படை சிப்பாய் துப்பாக்கியுடன் கைது!

கொழும்பு, ஜூலை 14

முன்னாள் படை சிப்பாய் ஒருவர் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு – பிலியந்தலை பகுதியில் வைத்தே சந்தேகநபர் சி. ஐ. டியினரால் கைது செய்யப்பட்டார்.

சி. ஐ. டியினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின்பேரிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். கைதானவர் அதே இடத்தைச் சேர்ந்த 51 வயது நபராவார்.

மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மலேசியாவில் கைது செய்யப்பட்ட பாதாள குழுவினர் தப்பியோட்டம்?

கொழும்பு, ஜூலை 14

பாதாள உலகக் குழுவை சேர்ந்தவரும் கணேமுல்லை சஞ்சீவ கொலைக்கு திட்டம் தீட்டியவர் என்று சந்தேகிக்கப்படும் கெஹல்பத்தர பத்மே உள்ளிட்ட மூவர் மலேசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இந்த நிலையில், இவர்கள் மூவரும் தப்பியோடியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இவர்கள் தாய்லாந்துக்கு படகு மூலம் தப்பிச் சென்ற போது மலேசிய பாதுகாப்பு படையினரால் கடந்த 9ஆம் திகதி கைது செய்யப்பட்டனர். இதனை இலங்கை பொலிஸாரும் உறுதி செய்திருந்தனர்.

கைதானவர்களை அழைத்து வர குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் குழு அனுப்பப்பட்டது.

இருப்பினும், கெஹல்பத்தர பத்மே உள்ளிட்ட மூவரும் மலேசிய பொலிஸின் காவலிலிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகிறது.

அவர்களை அழைத்து வரச் சென்ற குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் இன்றைய தினம் நாடு திரும்பவுள்ளனர் என்று தென்னிலங்கை ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

# மாடியிலிருந்து தவறி விழுந்து உயிரிழப்பு!

கண்டி, ஜூலை 14

கண்டி பொது மருத்துவமனையின் மாடி கட்டடத்துக்கு வர்ணம் பூசும் பணியில் ஈடுபட்டிருந்தவர் தவறி விழுந்து உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர், மூன்றாவது மாடியில் வர்ணம் பூசிக்கொண்டிருந்தபோது மயங்கி கட்டடத்திலிருந்து விழுந்துள்ளார் என்று கூறப்படுகிறது.

உடனடியாக அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டபோதிலும் அவர் உயிரிழந்தார். இந்த சம்பவத்தில் 71 வயது நபரே உயிரிழந்தார். (ஐ)

# அமெரிக்காவின் வரியால் நாட்டில் நெருக்கடி ஏற்படும்

## முன்னாள் ஜனாதிபதி ரணில்



கொழும்பு, ஜூலை 14

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரி விதிப்புகளால் நாட்டின் ஆடைத் தொழிற்துறை நெருக்கடியை எதிர்கொள்ளக்கூடும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், இந்தியாவுடன் கைச்சாத்திடுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகாததால் நிவாரணங்களைப் பெறுவதிலும் நெருக்கடி ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஆடை தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள உயர்மட்ட தொழிலதிபர்களை சந்தித்த போதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறினார்.

நாட்டின் பொருளாதாரம் ஆடைகள் மற்றும் தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் செல்வதால் கிடைக்கும் அந்நிய செலாவணியை அடிப்படையாகக் கொண்டது. இவ்வாறு பொருளாதாரத்தை வெறுமனே ஆடை ஏற்றுமதியால் மாத்திரம் இயக்க முடியும் என்று எண்ணினால் அது தவறு.

அடுத்த ஆண்டு ஐரோப்பாவில் பொருளாதார சரிவு ஏற்பட்டால், அந்தப் பக்கத்திலிருந்தும் நாம் பாதிக்கப்படுவோம். இந்நிலையில், இந்தியாவுடன் தேவையான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகாததால், அந்தப் பக்கத்திலிருந்தும் நிவாரணத்தை எதிர்பார்க்க முடியாது. நான் கூறியதுபோல் செயல்பட்டிருந்தால் இந்த ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டிருக்காது – என்றும் முன்னாள் ஜனாதிபதி கூறியிருந்தார். (ஐ)

# செவ்வந்தியின் தாயார் சிறையில் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 14

கணேமுல்லை சஞ்சீவ கொலை வழக்கில் முக்கிய சந்தேக நபர்களில் ஒருவரான இஷாரா செவ்வந்தியின் தாயார் சிறையில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

வெலிக்கடை சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது மாரடைப்பால் கடந்த வெள்ளிக்கிழமை அவர் உயிரிழந்தார் என்று கூறப்பட்டது.

சஞ்சீவ கொலையின் பிரதான சந்தேகநபரான இஷாரா செவ்வந்தியின் தாயாரும், சகோதரரும் கொலைக்கு உதவினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்தியாவுடனான ஒப்பந்தங்கள்:

# பகிரங்கப்படுத்தாதுவிடின் மக்களை திரட்டி போராட்டம்

## விமல் வீரவன்ஸ சொல்கிறார்

**கொழும்பு, ஜூலை 14**

**இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட 7 ஒப்பந்தங்களால் இலங்கைக்கு ஏதேனும் பாதிப்பு இல்லையாயின் ஏன் அவற்றை இரகசியமாக பேண வேண்டும். கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களை அரசாங்கம் உடன் வெளிப்படுத்த வேண்டும். இல்லையேல், அரசாங்கத்துக்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்டுவோம் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன் தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், மக்கள் ஆணைக்கு முரணாக அரசாங்கம் திருட்டுத்தனமான முறையில் 2025.04.05 ஆம் திகதி 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டுள்ளது. ஒப்பந்தங்கள் கைச்சாத்திட்டு 3 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் குறித்த ஒப்பந்தங்கள் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படவில்லை.

1987ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு இந்தியா கடும் அழுத்தம் பிரயோகித்தது. இதன் விளைவாகவே இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதன் விளைவாகவே அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் கைச்சாத்திடப்பட்டது.

2008 ஆம் ஆண்டு இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கைக்கு வந்திருந்தபோது சிபா ஒப்பந்தத்தை கைச்சாத்திட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடும் அழுத்தம் பிரயோகித்தார். அரசியல் தரப்பினர் மற்றும் சிவில் தரப்பினரின் கடும் எதிர்ப்பை தொடர்ந்து இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை.

இலங்கைக்கு அழுத்தம் பிரயோகித்தே இந்தியா வரலாற்று காலம் முதல் பல ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டுள்ளது. இந்திய பிரதமர் அண்மையில் இலங்கை வந்தபோது 7 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இந்த ஒப்பந்தங்கள் இதுவரையில் பாராளுமன்றத்துக்கும் நாட்டு மக்களுக்கும் இதுவரையில் வெளிப்படுத்தப்படவில்லை. இந்த ஒப்பந்தத்தால் இலங்கைக்கு ஏதேனும் பாதிப்பு இல்லையாயின் ஏன் ஒப்பந்தங்களை இரகசியமாக பேண வேண்டும். இந்தியாவுடன் கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களை அரசாங்கம் உடன் வெளிப்படுத்தவேண்டும் இல்லையேல் அரசாங்கத்துக்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்டுவோம்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை காட்டிலும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இந்தியாவுடன் நெருக்கமாகவுள்ளார். முன்வைக்கும் சகல ஒப்பந்தங்களுக்கும் முழுமையாக இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது - என்றும் கூறினார். (ஐ)

# நாட்டை பிரிக்கும் இந்தியாவின் முயற்சி இன்றும் மாறவில்லை!

## இந்துராகரே தம்மரத்ன தேரர்

கொழும்பு, ஜூலை 14

நாட்டை பிரிக்கும் இந்தியாவின் முயற்சி இன்றும் மாற்றமின்றி தொடர்கிறது என்று பேராசிரியர் இந்துராகரே தம்மரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கம் இதற்காக பல்வேறு உத்திகளைக் கையாள்கிறது.

கொக்காவில் தாக்குதலின் 35ஆவது நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே பேராசிரியர் இந்துராகரே தம்மரத்ன தேரர் இவ்வாறு கூறியுள்ளார்.

நாட்டைப் பிரிக்க வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாடு ஒரு தசம புள்ளிகூட மாறவில்லை. இந்தியா இப்போது இலங்கைக்கு 30 ஆயிரம் கோடி ரூபாய் கடன் நிவாரணம் வழங்கப் போகிறது.

இலங்கை இந்தியாவுக்கு செலுத்த வேண்டிய 170 கோடி டொலர்களை மீள அறவிடாமல் நமது பெரிய சகோதரர் கடன் நிவாரணம் வழங்கப் போகிறார். புலம்பெயர் மக்களைப் பயன்படுத்தியேனும் - அப்பாவி தமிழ் மக்களைப் பயன்படுத்தியேனும் - தந்திரோபாயங்களை பயன்படுத்தியேனும் - நமது நாட்டை பொருளாதார ரீதியாகவோ, பிராந்திய ரீதியாகவோ அல்லது அரசியல் ரீதியாகவோ ஒரு நாடாக நிலைகுலைத்து இறுதியில் 29ஆவது இந்திய மாநிலமாக உருவாக்கி அதன் பின்னர் கிழக்கு மற்றும் வடக்கை உடைத்த உடனேயே 30ஆவது இந்திய மாநிலமாக உருவாக்கும் திட்டமே இடம்பெறுகிறது - என்றும் கூறினார். (ஐ)



# பிரித்தானியாவின் சலுகையை சிறந்த முறையில் பயன்படுத்துக

## பொருளியல் பேராசிரியர் ஆலோசனை

கொழும்பு, ஜூலை 14

பிரித்தானியாவால் வழங்கப்பட்டுள்ள வரிச் சலுகையை இலங்கை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பிரித்தானியாவுக்கான பண்டங்கள், சேவைக்கான கேள்வியை அதிகரிப்பதற்கு கைத்தொழில் அமைச்சு விசேட திட்டங்களை செயற்படுத்த வேண்டும் என்று ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக பொருளியல் துறையின் தலைவர் பேராசிரியர் காமினி வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அமெரிக்காவால் இலங்கைக்கு விதிக்கப்பட்டுள்ள 30 சதவீத பரஸ்பர தீர்வை வரி மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிபந்தனைகள் குறித்து விரிவாக ஆராயப்பட வேண்டும். அமெரிக்காவின் இறக்குமதிக்கு சிறிதளவேனும் வரி வீதத்தை குறைத்திருந்தால் 30 சதவீத பரஸ்பர தீர்வை வரி மேலும் குறைவடைந்திருக்கும்.

அமெரிக்காவால் 30 சதவீத தீர்வை வரி விதிக்கப்பட்டுள்ள நிலையில், பிரித்தானியாவால் இலங்கைக்கு புதிய வரி சலுகை வழங்கப்பட்டுள்ளன. இதனை இலங்கை சாதகமாக பயன்படுத்தவேண்டும். இலங்கையில் இருந்து பிரித்தானியாவுக்கு 6 சதவீதமளவில்தான் பண்டங்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. புதிய சேவைகள் மற்றும் பண்டங்களை உருவாக்கும் வகையில் புதிய சந்தை வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# காலி - பொத்துவில் வரை சிவப்பு எச்சரிக்கை!

## வளிமண்டலவியல் திணைக்களம்

கொழும்பு, ஜூலை 14

காலியிலிருந்து மாத்தறை, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையிலான பகுதிகளுக்கு பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள சிவப்பு எச்சரிக்கையில்,

கடற் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 30 முதல் 40 கிலோ மீற்றர் வேகத்தில் மேற்கு திசையில் இருந்து தென் மேற்கு திசையை நோக்கி காற்று வீசும்.

காலி தொடக்கம் மாத்தறை, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 55 முதல் 65 கிலோமீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக் வீசும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடற் பிராந்தியங்கள் மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும்.

காலி தொடக்கம் கொழும்பு, புத்தளம், காங்கேசன்துறை, திருகோணமலை ஊடாக வாகரை வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 50 முதல் 60 கிலோமீற்றரிலும் கூடிய வேகத்தில் இடைக்கிடையே காற்று அதிகரித்து வீசும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும்.

புத்தளம் தொடக்கம் கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் கடல் அலையானது சுமார் 2.5 - 3.0 மீற்றர் உயரத்துக்கு எழக்கூடும். இதேவேளை இந்தக் கடல் பிராந்தியங்களை அண்மித்த தரை பிரதேசத்திற்கு கடல்நீர் உட்புகக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

எனவே, மீனவர்களை அவதானமாக செயல்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# நீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள்!

## மக்களுக்கு அறிவுறுத்து

கொழும்பு, ஜூலை 14

வறட்சியால் நீர் நிலைகளில் நீர் மட்டம் குறைந்து வருகிறது. எனவே, தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்துங்கள் என்று நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை நுகர்வோருக்கு அறிவித்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் வெப்பமான காலநிலையை தொடர்ந்து, வறட்சிக்குள்ளான சில பகுதிகளுக்கு எதிர்வரும் காலங்களில் பவுஸர் மூலம் தண்ணீர் வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் அந்த சபை தெரிவித்துள்ளது.

இருப்பினும், தற்போது அவ்வாறான சூழ்நிலை ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 21 மோ. சைக்கிள்களுடன் இருவர் கைது!



நாட்டுக்குள் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 21 மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டன. அத்துடன், இது தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பறவைகள் காப்பகம் ஒன்றின் முகாமையாளர், களஞ்சியசாலையின் கட்டுப்பாட்டாளர் ஆகியோரே இவ்வாறு கைதாகினர். இவர்கள் மாத்தறை மாவட்டத்தை சேர்ந்தவர்களாவர்.

பதில் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரியவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, மத்திய குற்றப்புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்த தேடுதலின்போது இந்த மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டன. இவற்றின் பெறுமதி சுமார் ஒன்றரை கோடி ரூபாய்க்கும் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்று பிரசித்தி பெற்ற கோரக்கர் கோவில் சிறீ அகோரமாரியம்பாள் ஆலய வருடாந்த தீ மிதிப்பு வைபவம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.
(படங்கள்:- வி. ரி. சகாதேவராஜா)

# டெங்கு ஒழிப்பு, நோய்த்தடுப்பு பற்றி சுகாதாரத் துறை விரிவாக ஆராய்வு

கல்முனை, ஜூலை 14

**டெங்கு ஒழிப்பு, நோய்த்தடுப்பு உள்ளிட்ட செயல்பாடுகளில் சுகாதாரத் துறையை வினைத்திறனுடன் முன்னெடுக்கும் முகமாக விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.**

சுகாதாரத் துறையை வினைத்திறனுடன் முன்னெடுக்கும் முகமாக அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுடனான கலந்துரையாடல் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம். மாஹிரின் நெறிப்படுத்தலில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் அக்கரைப்பற்று மாநகர சபையின் பிரதி முதல்வர், அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில், நிந்தவூர், நாவிதன்வெளி, அட்டாளைச்சேனை, காரைதீவு பிரதேச சபைகளின் தவிசாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது உள்ளூராட்சி மன்றங்கள் சுகாதார சேவைகளை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்காக உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் சுகாதாரத் துறை அதிகாரிகள் இணைந்து இவ்வாறான சந்திப்புகளை நடத்துகின்றனர். இதில் பொதுச் சுகாதாரம், துப்புரவு மற்றும் நோய்த்தடுப்பு போன்ற விடயங்களில் கவனம் செலுத்தப்படுகிறது. சுகாதாரம் மற்றும் சேவை வழங்களை மேம்படுத்துவதற்காக உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் சுகாதாரத் துறை அதிகாரிகள் இவ்வாறு இணைந்து சந்திக்கும் போது சுகாதாரத்துறையை வினைத்திறனுடன் முன்னெடுக்க உதவியாக இருக்கும் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றங்கள், பொதுச் சுகாதாரம் தொடர்பான சேவைகளை மக்களுக்கு வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சுகாதார விழிப்புணர்வு பிரசாரங்கள், துப்புரவு நடவடிக்கைகள் மற்றும் நோய்த்தடுப்பு திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ளூராட்சி மன்றங்கள் ஈடுபடுகின்றன. எதிர்காலத்தில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையுடன் இணைந்து செயல்பட உறுதியாகவுள்ளதாக உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.

விசேடமாக பிரதேச மருத்துவமனைகளின் வளப்பற்றாக்குறை மற்றும் அபிவிருத்தி, டெங்கு ஒழிப்பு, திண்ம கழிவகற்றல் உட்பட பல விடயங்கள் காட்சித் திரை ஊடாக ஆராயப்பட்டன. (எ-01)



# இரண்டு நூல்களின் வெளியீடும் கலைக்கேசரி விருது வழங்கலும்

திருகோணமலை, ஜூலை 14

திருகோணமலை வாசல் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் எழுத்தாளர் விக்கி நவரட்ணம் எழுதிய "தூரத்து விண்மீனை கண்டேன்", "விழிகளில் ஒரு வானவில்" ஆகிய இரு நூல்கள் நேற்று முன்தினம் வெளியீடு செய்யப்பட்டன.

திருகோணமலை மாநகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக திருகோணமலை மாநகர சபை முதல்வர் க. செல்வராஜா, சிறப்பு விருந்தினராக திருகோணமலை தமிழ்ச் சங்கத்தின் தலைவர், திருமலை நவம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நூல்களுக்கான மதிப்பீட்டுரைகளை கலாநிதி சிறீ ஞானேஸ்வரன், கவிஞர் க. யோகானந்தம், கவிஞர் யோ. புரட்சி ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் கலை, இலக்கியம், நாடகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் பல வருட காலம் சேவையாற்றிய சிவசிறீ அ. அரசரெத்தினம், பி. ரி. அஸீஸ், வே. சரவணபவ ஆனந்தம், விக்கி நவரட்ணம், ப. மதிபாலசிங்கம் ஆகியோர் கலைக்கேசரி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (எ)

மட்டக்களப்பு விளையாட்டு வீரர்களை

# தேசிய ரீதியில் மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்

மட்டக்களப்பு, ஜூலை 14

கடந்த காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் திறமையான விளையாட்டு வீரர்களை தேசிய ரீதியில் கொண்டுசெல்வதற்கு அரசுகள் முன்வராத நிலையில் அந்தச் செயல்பாடுகளை இந்த அரசாங்கம் முன்னெடுக்கும் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

மெதடிஸ்த மத்திய கல்லூரியின் 211ஆவது ஆண்டு நிறைவு பூர்த்தியடைந்துள்ள நிலையில் அதனை சிறப்பிக்கும் வகையில் மெதடிஸ்த மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த சுற்றுப்போட்டி ஆரம்பமாகியுள்ளது.

மெதடிஸ்த மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் வை. கோபிநாத் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவரும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான கந்தசாமி பிரபு பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)



# பிள்ளையார் ஆலய சங்காபிஷேகம்





மட்டக்களப்பு, ஜூலை 14

மட்டக்களப்பு, மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக வளாகத்தில் அமைந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் பழந்தோட்ட பிள்ளையார் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் பிரதேச செயலாளர் உ. உதயசிறீதர் தலைமையில் அலுவலக உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது பிரதேச செயலக திட்டமிடல் பிரிவு உத்தியோகத்தர்களால் மாடித் தோட்டத்தில் நடுகை செய்யப்பட்ட பாரம்பரிய நெல் இன அறுவடையும் சம்பிரதாயபூர்வமாக நடைபெற்றது. (எ-08)

# காரைதீவில் 7 மாணவர்களுக்கு 9 ஏ

காரைதீவு, ஜூலை 14

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் அம்பாறை மாவட்டத்தில் காரைதீவில் 7 மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

காரைதீவு இ. கி. ச. பெண்கள் பாடசாலையைச் சேர்ந்த ஆறு மாணவிகள் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

[illegible] யூ. லோவித்யா, வை.வைசாலி ஆகிய ஆறு மாணவிகளே 9 ஏ சித்திகளைப் பெற்றவர்கள் ஆவர்.

காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியில் எஸ். றவீன் என்ற மாணவன் 9 ஏ சித்தி பெற்றுள்ளார்.

இதேவேளை, 2023 இல் க. பொ. த. சாதாரண தர பரீட்சை முடிவுகளின் படி காரைதீவு பிரதேச பாடசாலைகளில் மொத்தமாக 24 மாணவர்கள் 9 ஏ சித்திகளை பெற்றிருந்தனர்.

காரைதீவு இ.கி.ச பெண்கள் பாடசாலையில் 17 மாணவர்கள் 9 ஏ சித்தி பெற்று சாதனை படைத்திருந்தனர்.

விபுலானந்த மத்திய கல்லூரியில் 05 மாணவர்களும் சண்முகா மகா வித்தியாலயத்தில் 02 மாணவர்களும் 9 ஏ சித்தி பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-08)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் காஸாவில் 110 பேர் உயிரிழப்பு!



காஸா, ஜூலை 14


**காஸாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தரைவழி, வான்வழித் தாக்குதல்களில் சிக்கி 110 பேர் உயிரிழந்தனர்.**

காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 1139 இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர். மேலும், இஸ்ரேலிலிருந்து 251 பேரை பணயக் கைதிகளாக காஸா முனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர்.

இதையடுத்து, ஹமாஸ் அமைப்பு மீது போர் அறிவித்த இஸ்ரேல், காஸா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. இதேவேளை, பணயக் கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும் இராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது.

இதேவேளை, பணயக் கைதிகளை மீட்கவும், ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக ஒழிக்கும் நோக்கிலும் காஸா முனையில் இஸ்ரேல் தொடர்ந்து தரைவழி, வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்த நிலையில், காஸா முனையில் நேற்று முன்தினம் இஸ்ரேல் தரைவழி, வான்வழித் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதல்களில் 110 பேர் உயிரிழந்தனர். இதன் மூலம் இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் காஸாவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 57 ஆயிரத்து 882 ஆக அதிகரித்தது. (எ)



# பௌத்த மடாலயம் மீது குண்டுவீச்சு: 23 பேர் பலி

## மியன்மாரில் இராணுவம் நடத்தியது

நேபிடோவ், ஜூலை 14

மியன்மாரில் உள்ள பௌத்த மடாலயம் மீது மியன்மார் விமானப்படை மேற்கொண்ட வான்வழித் தாக்குதலில் 23 பேர் உயிரிழந்தனர்.

மியன்மாரின் சாகிங் பிராந்தியத்தின் சாகிங் டவுன்ஷிப்பில் உள்ள லிண்டலு கிராமத்தில் இடம்பெயர்ந்த பொதுமக்களுக்கு அடைக்கலம் கொடுத்த மடாலயத்தின் மீது மியன்மார் இராணுவ ஆட்சிக்குழு வான்வழியாக குண்டுகளை வீசியுள்ளது.

சகாயிங் மாகாணத்தில் உள்நாட்டு கிளர்ச்சிப்படைக்கும் மியன்மார் இராணுவத்துக்கும் இடையில் கடந்த சில வாரங்களாக மோதல்கள் அதிகரித்துள்ளன.

இருதரப்புக்கும் இடையில் நடைபெறும் மோதல்களிலிருந்து தப்பித்து மடத்தில் தஞ்சமடைந்திருந்த சுமார் 150இற்கும் மேற்பட்டோர் இரவு உறங்கிக்கொண்டிருந்தபோது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆங் சான் சூகி தலைமையிலான அரசை கவிழ்த்து, இராணுவத்தின் ஆட்சி அமைக்கப்பட்டது முதல் மியன்மாரில் உள்நாட்டு மோதல்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# அகதிகள் படகு கடலில் கவிழ்ந்து விபத்து!

## நால்வர் உயிரிழப்பு

டொமினிகா, ஜூலை 14

அகதிகள் படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் நால்வர் உயிரிழந்தனர். 19 பேரை மீட்புக்குழுவினர் தீவிரமாக தேடி வருகின்றனர்.

டொமினிக்கன் குடியரசு, ஹைதி நாடுகளை சேர்ந்த 40 பேர் சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் அகதிகளாக நுழைய முயன்றனர். இதற்காக நேற்று முன்தினம் படகு மூலம் டொமினிக்கன் குடியரசிலிருந்து அட்லாண்டிக் கடல் வழியாக அமெரிக்காவின் புவேர்ட்டோ ரிக்கோ தீவுக்கு புறப்பட்டுள்ளனர்.

டொமினிக்கன் குடியரசு கடற்பகுதியில் சென்றபோது படகு எதிர்பாராத விதமாக கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதனால் படகில் பயணித்த அனைவரும் கடலில் மூழ்கி தத்தளித்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த டொமினிக்கன் குடியரசு கடற்படையினர் கடலில் மூழ்கிய 17 பேரை உயிருடன் மீட்டனர். ஆனாலும், இந்த சம்பவத்தில் 4 அகதிகள் உயிரிழந்தனர். எஞ்சிய 19 பேரை மீட்புக்குழுவினர் தீவிரமாக தேடி வருகின்றனர்.



# அமெரிக்காவுக்கு பிரேசில் பதிலடி

பிரேசிலியா, ஜூலை 14

அமெரிக்கா பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைக்கவில்லை என்றால் பரஸ்பர சட்டம் நடைமுறைக்கு வரும் என்று பிரேசில் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

அமெரிக்கா ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பிரேசிலுக்கு அதிக பட்சமாக 50 சதவீதம் வரி விதித்து அதிரடி காட்டியுள்ளார். இது வர்த்தக போரை மேலும் அதிகரித்து இருக்கிறது. இதற்கு நாங்களும் 50 சதவீதம் வரி விதிப்போம் என்று பிரேசில் பதிலடி கொடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த நாட்டின் ஜனாதிபதி லூயிஸ் இன்சியோலுலா டா சில்வா கூறுகையில், முதலில் பேச்சுவார்த்தை நடத்த முயற்சி செய்வோம். பேச்சுவார்த்தை இல்லை என்றால் பரஸ்பர சட்டம் நடைமுறைக்கு வரும். அவர்கள் எங்களிடம் 50 சதவீதம் வசூலிக்க போகிறார்கள் என்றால் நாங்கள் அமெரிக்காவிடம் 50 சதவீதம் வரி வசூலிப்போம்- என்றார்.

# வடகொரியாவுக்கு எதிராக இராணுவ கூட்டணி வேண்டாம்

## தென்கொரியாவுக்கு ரஷ்யா எச்சரிக்கை

மொஸ்கோ, ஜூலை 14

வடகொரியாவுக்கு எதிராக இராணுவக் கூட்டணி அமைப்பதை உடன் கைவிட வேண்டும் என்று ரஷ்யா எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொரிய தீபகற்பத்தில் ஏவுகணை மற்றும் அணு ஆயுத சோதனை மூலம் வடகொரியா அவ்வப்போது பதற்றத்தைத் தூண்டுகின்றது. இதனை சமாளிக்க அமெரிக்கா, ஜப்பானுடன் இணைந்து தென்கொரியா கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபடுகிறது. இதனைத் தங்களுக்கு எதிரான போர் ஒத்திகையாக வடகொரியா கருதுகிறது.

எனவே கூட்டுப்போர் பயிற்சியை கைவிட வேண்டும் என வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தென்கொரியாவின் இந்த நடவடிக்கைக்கு ரஷ்யாவும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இது குறித்து அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் கூறுகையில், "வடகொரியாவுக்கு எதிராக தென்கொரியா உருவாக்கி வரும் இராணுவக் கூட்டணியை உடன் கைவிட வேண்டும்" என எச்சரிக்கை விடுத்துள்ளார். (எ)

# வலிமையின் அடையாளம் அல்ல குற்ற உணர்வின் அடையாளம்


## அமெரிக்காவின் தடை குறித்து ஐ. நா. அறிக்கையாளர் சாடல்

ஜெனிவா, ஜூலை 14

குரலற்றவர்களுக்காக குரல் கொடுப்பவர்களை வலிமை மிக்கவர்கள் தண்டிப்பது வலிமையின் அடையாளம் அல்ல, குற்ற உணர்வின் அடையாளம் என்று இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளை கண்டித்தமைக்காக அமெரிக்காவின் தடையை எதிர்நோக்கியுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் பிரான்செஸ்கா அல்பெனிஸ் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடக பதிவில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். "நாங்கள் ஒன்றாக நிமிர்ந்து நிற்போம். காஸா எதிர்கொண்டுள்ள நெருக்கடி குறித்து அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்.

அனைவரினது கண்களும் தொடர்ந்தும் பிள்ளைகள் பட்டினி காரணமாக தாய்மாரின் கரங்களில் உயிரிழக்கும் - உணவு தேடும் போது அவர்களின் தந்தைமாரும் சகோதரர்களும் குண்டுவீச்சில் துண்டுதுண்டாக்கப்படும் காஸா மீது இருக்கவேண்டும். நான் யாரையோ பதற்றமடையச் செய்திருக்கின்றேன் போல தோன்றுகின்றது. காஸாவில் மக்கள் மரணித்துக் கொண்டிருக்கின்றார்கள், ஐக்கிய நாடுகளால் அதனை நிறுத்த முடியாமல் உள்ளது என்பதே எனது கரிசனை"-என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)



# தமிழ்நாட்டில் கூட்டணி ஆட்சி

## அமித்ஷா மீண்டும் அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 14

தமிழ்நாட்டில் கூட்டணி ஆட்சி அமையும் என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 2026இல் தமிழகத்தில் நடைபெறவுள்ள தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்றால் ஆட்சியில் பா.ஜ.க. பங்கேற்குமா? என்ற கேள்விக்கு, "ஆம்" என பதிலளித்தார். மேலும் தமிழ்நாட்டில் அ.தி.மு.க. அமைக்கும் அரசின் அமைச்சரவையில் பா.ஜ.க. நிச்சயம் இடம்பெறும் என்றும் அமித்ஷா கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி வெற்றி

## ரி - 20 தொடர் இந்தியா வசமானது

பர்மிங்காம், ஜூலை 14

இந்திய மகளிர் அணியை 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய இங்கிலாந்து மகளிர் அணி திரில் வெற்றி பெற்றது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய மகளிர் அணி 5 ரி- 20, 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில், ரி - 20 தொடரில் 4 ஆட்டங்களில் 3இல் இந்தியாவும் ஒன்றில் இங்கிலாந்தும் வெற்றிபெற்றது. இந்தத் தொடரை இந்தியா ஏற்கனவே கைப்பற்றிய நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான கடைசி ரி- 20 போட்டி பர்மிங்காமில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதலில் களமிறங்கிய இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 167 ஓட்டங்கள் எடுத்தது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஷபாலி வர்மா 75 ஓட்டங்கள் சேர்த்தார். இங்கிலாந்து தரப்பில் அந்த அணியின் சார்லி டீன் அதிகபட்சமாக 3 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதையடுத்து, 168 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து அணியின் தொடக்க வீராங்கனைகளாக சோபியா - டானியல் களமிறங்கினர். சோபியா 46 ஓட்டங்களும் டானியல் 56 ஓட்டங்களும் எடுத்தனர். பின்னர் களமிறங்கிய மையா 16 ஓட்டங்களிலும் பியூமவுண்ட் 30 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இறுதியில் இங்கிலாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 168 ஓட்டங்கள் எடுத்தது.

இதன் மூலம் இந்தியா மகளிர் அணியை 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய இங்கிலாந்து மகளிர் அணி வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து அணி




வெற்றி பெற்றபோதும் 5 ஆட்டங்கள் கொண்ட ரி -20 தொடரை 3 - 2 என்ற கணக்கில் இந்தியா வென்றது. இதனைத் தொடர்ந்து இரு அணிகளுக்கும் இடையேயான முதல் ஒருநாள் போட்டி நாளை மறுதினம் 16ஆம் திகதி நடைபெறுகிறது. (எ)

# முதல் இன்னிங்ஸில் இரு அணியும் சமன்

## கே. எல். ராகுல் சதம்

லண்டன், ஜூலை 14

மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இந்தியாவும் இங்கிலாந்தும் முதல் இன்னிங்ஸில் 387 ஓட்டங்கள் எடுத்து சமநிலையில் உள்ளன.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. முதல் டெஸ்ட்டில் இங்கிலாந்தும் 2ஆவது டெஸ்ட்டில் இந்தியாவும் வெற்றி பெற்றன. இதனால், 1 - 1 என்ற கணக்கில் இரு அணிகளும் சம நிலையில் உள்ளன.


இதனிடையே, இரு அணிகளுக்கும் இடையேயான 3ஆவது டெஸ்ட் லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் கடந்த 10 ஆம் திகதி தொடங்கியது. இதில் இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 387 ஓட்டங்கள் குவித்தது. அந்த அணியின் ஜோ ரூட் அதிகபட்சமாக 104 ஓட்டங்கள் எடுத்தார். இந்தியா தரப்பில் ஜஸ்பிரித் பும்ரா அதிகபட்சமாக 5 விக்கெட்களை வீழ்த்தினார். இதையடுத்து, களமிறங்கிய இந்தியா 2ஆம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 145 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இதனைத் தொடர்ந்து 3ஆம் நாள் ஆட்டம் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்திய வீரர் கே.எல். ராகுல் 100 ஓட்டங்கள் குவித்தார். ரிஷப் பண்ட் 74 ஓட்டங்களும் ரவீந்திர ஜடேஜா 72 ஓட்டங்களும் சேர்த்தனர். இறுதியில் இந்திய அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 387 ஓட்டங்கள் எடுத்தது. இங்கிலாந்து தரப்பில் கிறிஸ் வோக்ஸ் அதிகபட்சமாக 3 விக்கெட்களை வீழ்த்தினார்.

முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்தும் இந்தியாவும் தலா 387 ஓட்டங்கள் எடுத்ததால் இரு அணிகளும் சம நிலையில் உள்ளன.

இதையடுத்து, இங்கிலாந்து 2ஆவது இன்னிங்ஸை தொடங்கியது. இறுதியில், 3ஆம் நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து விக்கெட் இழப்பின்றி 2 ஓட்டங்கள் எடுத்திருந்தது. (எ)



# 225 ஓட்டங்களுக்குள் சுருண்டது ஆஸி. அணி

ஜமைக்கா, ஜூலை 14

மேற்கு இந்திய தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணி 225 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

மேற்கு இந்திய தீவுகளுக்கு சென்றுள்ள பட் கம்மின்ஸ் தலைமையிலான அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் முதல் போட்டியில் 159 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் 2ஆவது டெஸ்டில் 133 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றி விட்டது.

இந்த நிலையில் இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி ஜமைக்காவின் கிங்ஸ்டனில் உள்ள சபீனா மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

அவுஸ்திரேலியாவின் தொடக்க வீரர்களாக கவாஜா, சாம் கான்ஸ்டாஸ் களமிறங்கினர். இதில் கவாஜா 23, கான்ஸ்டாஸ் 17 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். அடுத்து களம் புகுந்த கேமரூன் க்ரீன் 46, ஸ்டீவ் ஸ்மித் 48, டிராவிஸ் ஹெட் 20, வெப்ஸ்டர் 1, அலெக்ஸ் ஹெரி 21, பட் கம்மின்ஸ் 24, ஹேசில்வுட் 4 ஓட்டங்கள் எடுத்து அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறினர்.

இறுதியில் அவுஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்ஸில் 225 ஓட்டங்களுக்கு சுருண்டது. மேற்கு இந்திய தீவுகள் அணி தரப்பில் ஷமர் ஜோசப் 4 விக்கெட்கள் வீழ்த்தினார். தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணி முதல் நாள் முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 16 ஓட்டங்கள் எடுத்திருந்தது. (எ)

# லோர்ட்ஸ் மைதானத்தில் கிராலி - கில் முரண்பாடு

லண்டன், ஜூலை 14

லோர்ட்ஸ் மைதானத்தில் ஜாக் கிராலியுடன் சுப்மன் கில் கருத்து முரண்பாட்டில் ஈடுபட்டார்.

இங்கிலாந்து - இந்தியா இடையேயான 3ஆவது டெஸ்ட் லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில், நேற்று முன்தினம் இங்கிலாந்து அணி 2ஆவது இன்னிங்ஸை தொடங்கியது. 3ஆம் நாள் ஆட்டத்தின் கடைசி சில நிமிடங்களே எஞ்சிய நிலையில் இங்கிலாந்து 2ஆவது இன்னிங்ஸை தொடங்கியது. பென் டக்கெட், ஜாக் கிராலி தொடக்க வீரர்களாக களமிறக்கினர். முதல் ஓவரை ஜஸ்பிரித் பும்ரா வீசினார். அப்போது, ஓவரின் நடுவே இங்கிலாந்து வீரர் ஜாக் கிராலி நேரத்தை கடத்த முற்பட்டார்.

பும்ரா தொடர்ச்சியாக பந்து வீசுவதை தடுக்கும் வகையில் ஜாக் கிராலி செயல்பட்டதுபோன்ற சூழ்நிலை உருவானது. இதனால் ஆத்திரமடைந்த இந்திய அணித் தலைவர் சுப்மன் கில், ஜாக் கிராலியுடன் மைதானத்தில் முரண்பட்டார். வாக்குவாதம் முற்றிய நிலையில் பென் டக்கெட் சமாதானப்படுத்த முயன்றார். அப்போது, இந்திய அணியினர் திரண்டனர். இதனால், மைதானத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இறுதியில் இந்திய அணி ஓர் ஓவரை மட்டுமே வீசிய நிலையில் நேரம் நிறைவடைந்ததால் 3ஆம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. மைதானத்தில் கில் - கிராலி வாக்குவாதத்தில் ஈடுபட்ட வீடியோ தற்போது சமூகவலைத்தளத்தில் வைரலாகி வருகிறது. (எ)



## விம்பிள்டன் ரென்னிஸ்:

# ஆண்கள் இரட்டையர் பிரிவில் இங்கிலாந்து அணி சம்பியன்



லண்டன், ஜூலை 14

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் இரட்டையர் பிரிவில் இங்கிலாந்து அணி சம்பியனானது.

“கிராண்ட்ஸ்லாம்” போட்டிகளில் மிகவும் கௌரவமிக்கதான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள இந்தத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் இரட்டையர் பிரிவின் இறுதிப்போட்டியில் இங்கிலாந்து ஜோடியான லாயிட் கிளாஸ்பூல் - ஜூலியன் கேஷ், ரிங்கி ஹிஜிகாடா (அவுஸ்திரேலியா) டேவிட் பெல் (நெதர்லாந்து) இணையுடன் மோதியது.

இதில் தொடக்கம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இங்கிலாந்து ஜோடி 6-2 மற்றும் 7-6 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைத்துத் தரப்பினருடனும்...

- த.பிரதீபன் -

ஐ. நா. மனித உரிமைகள் ஆணை ாளருக்கு கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி எழுதிய கடிதத்தை எந்தவிதமான பின்வாங்கலும் இல்லாமல் மிக இறுக்கமாக அனைவராலும் கடைப்பிடிப்பதற்குரிய அணுகுமுறையை உறுதிப்படுத்துவதற்கு எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் தமிழ் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், சிவில் சமூக செயல்பாட்டாளர்கள், மனித உரிமைகள் அமைப்புகளை ஓரிடத்தில் சந்தித்து பேசவுள்ளதாக தமிழ்த் தேசிய பேரவையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அவரின் கட்சியின் தலைமை பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், 2021 ஜனவரி மாதம் அனைத்து தமிழ் தேசிய கட்சிகளும் சிவில் சமூக அமைப்புகளும் செயல்பாட்டாளர்களும் கையொப்பமிட்டு ஐ. நா. மட்டத்தில் தமிழ் மக்கள் மற்றும் தமிழ் தேசத்துக்கு நடைபெற்ற இனப்படுகொலைக்கான குற்றங்கள், போர் குற்றங்கள் என்பன எவ்வாறு கையாளப்பட வேண்டும் அதாவது "ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு இலங்கையின் சம்மதம் இல்லாமல் எதுவும் செய்ய முடியாது என்றும் ஆகவே, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட வேண்டும் அல்லது இலங்கைத் தொடர்பில் குற்றவியல் தீர்ப்பாயம் உருவாக்கப்பட்டு பாரப்படுத்தப்பட்டு முழுமையான சர்வதேச விசாரணையை வலியுறுத்தி கடிதம் ஒன்றை எழுதினோம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளின் பேரவையின் ஆணையாளர் கடந்த வாரம் இலங்கைக்கு வருகை தந்த போது தமிழ் தேசிய கட்சிகளின் தலைவர்கள் மற்றும் சிவில் சமூக தலைவர்கள் செயல்பாட்டாளர்களின் ஒப்புதலோடு ஒரு கடிதத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரிடம் வழங்கினோம். அந்த கடிதத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் கையொப்பமிட்டனர்.

அந்த கடிதம் வழங்கி அடுத்த வாரமே இலங்கை தமிழ் அரசுக் கட்சி தலைவரும் பொதுச்செயலாளரும் செம்மணி விவகாரத்தில் இலங்கை அரசாங்கத்திடம் அந்த விசாரணை நடத்துவதற்குரிய அங்கீகாரத்தை கூறி அதற்கு மேலதிகமாக ஒரு சில சர்வதேச தரப்புகளின் கண்காணிப்போடு செய்வதற்குரிய ஆலோசனைகளையும் வழங்கி இருக்கிறார்கள். இது நேருக்கு நேர் முரண்பட்ட நிலைப்பாடு. செம்மணியில் நடந்தது அநியாயம். இலங்கை அரசு இதனை மூடி மறைக்க முயற்சித்த நிலையில் எதேச்சையாக தற்போது வெளி வந்திருக்கிற ஆதாரங்களை மூடி மறைக்கின்ற சந்தர்ப்பங்களை நீங்கள் வழங்குகிறீர்கள் என்பதாகவே இந்த கடிதத்தை பார்க்க வேண்டியுள்ளது.

இப்படிப்பட்ட தவறுகள் நடக்கக் கூடாது என்பதற்காக எதிர்வரும் வாரத்தின் இறுதியில் தமிழ் தேசியக் கட்சித் தலைவர்கள் அனைவரையும் சிவில் சமூக செயல்பாட்டாளர்களையும் மனித உரிமை அமைப்புகளையும் ஓரிடத்தில் சந்தித்து 2021 ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி எழுதிய கடிதத்தை எந்த விதமான பின்வாங்கலும் இல்லாமல் மிக இறுக்கமாக அனைவராலும் கடைப்பிடிப்பதற்குரிய அணுகுமுறையை உறுதிப்படுத்துவதற்கு கூட்டம் ஒன்றை நடத்த நாங்கள் அழைப்பு விடுக்கிறோம் - என்றார்.

(ஐ)

## ஈஸ்டர் குண்டுத்...

முற்றிலும் பொய் - இவ்வாறு பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள் ளார்.

தமிழ் பிரிவினைவாதிகளின் நிதியை இந்த அரசாங்கம் பெற்றுள்ளது. தமிழ் பிரிவினைவாதிகளை மகிழ்விப்பதற்கு விடுதலை புலிகளிலிருந்து விலகி இராணுவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய பிள்ளையானை பலி கொடுக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. நன்றிக்கடன் நிமித்தமே பிள்ளையானுக்காக நீதிமன்றில் முன்னிலையாகியுள்ளேன் - என்றும் அவர் கூறினார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை பிள்ளையான் சிறையில் இருந்தவாறே முன்கூட்டியதாகவே அறிந்துள்ளார் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு வருமாறு குறிப்பிட்டார்.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால 2025.04.10ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் "தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பிள்ளையான் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் சர்ச்சைக்குரிய பல விடயங்களை விசாரணையின் போது குறிப்பிட்டுள்ளார்" என்று தெரிவித்தார். இதனை நம்பி ஜனாதிபதியும் ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்துதாகக் குறிப்பிட்டார்.

பிள்ளையானை நான் சிறையில் சென்று சந்தித்தேன். குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் பிள்ளையானிடம் விசாரணை அதிகாரிகள் ஏதும் கேட்கவுமில்லை - அவரும் ஏதும் குறிப்பிடவுமில்லை. ஆகவே, அமைச்சர் ஆனந்த விஜயபால பொய்யுரைத்தார் என்பதை ஊடகங்களுக்கு குறிப்பிட்டேன்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் சம்பவத்துக்காக பிள்ளையான் கைது செய்யப்பட்டார் என்று குறிப்பிடுவது பொய், அவ்வாறு குறிப்பிடுபவர்களுக்கு பைத்தியம். கிழக்கு பல்கலைக் கழக உபவேந்தரை கடத்தி, காணாமலாக்கிய சம்பவத்துக்காகவே பிள்ளையாள் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி குறிப்பிட்டிருந்தார். ஆகவே, சுனில் ஹந்துன்னெத்தி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவுக்கும் ஜனாதிபதிக்கும் பதிலளித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால கடந்த அண்மையில் பாராளுமன்றத்தில் பிள்ளையான் பற்றி குறிப்பிட்டது முற்றிலும் பொய்யானது. பிள்ளையான் கைது செய்யப்பட்டமைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் இரண்டு அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், பிள்ளையான் தமிழ் மொழியில் வழங்கிய வாக்குமூலத்தின் பிரதியை பொலிஸார் நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்துள்ளனர்.

தமிழ் மொழிமூல வாக்குமூலம் ஆங்கில மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டு எனக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. அந்த வாக்குமூலத்தில் எவ்விடத்திலும் குண்டுத் தாக்குதல்கள் பற்றி குறிப்பிடப்படவில்லை. உபவேந்தர் காணாமலாக்கப்பட்ட சம்பவம் பற்றியே கேள்வியெழுப்பப்பட்டுள்ளது - என்றார் (ஐ)

## வெளிநாட்டு...

சந்தேகநபரிடமிருந்து 700 வெளிநாட்டு சிகரெட்கள் கைப்பற்றப்பட்டன. கைதான சந்தேகநபரை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## வடக்கில்....

நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

நயினாதீவு பிராந்திய மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவு கட்டடத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

சுகாதார அமைச்சராக யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதிக்கு தான் மேற்கொண்ட முதல் பயணம் இது என்று குறிப்பிட்ட அமைச்சர், நாடு முழுவதும் இதுபோன்ற பிராந்திய சுகாதார மையங்களை நிறுவுவதற்கான விரிவான திட்டம் கடந்த சில மாதங்களாக தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நாட்டில் சுகாதார சேவை ஒரு மாற்றத்துக்கு உட்பட வேண்டும். உலகில் சுகாதார சேவைகள் மாற்றத்துக்கு உட்பட்டுள்ளன. சுகாதார சேவை மக்களை மையமாகக் கொண்டதாக இருக்க வேண்டும்.

இது, ஒரு காலத்தில் மருத்துவரை மையமாகக் கொண்ட சுகாதார சேவையாக இருந்தது. சிகிச்சை பெறுவதற்காக மக்கள் நீண்ட தூரம் பயணிக்கப் பழகிவிட்டனர். இந்த நிலைமை யாழ்ப்பாண மருத்துவமனைகளில் நோயாளிகளின் நெரிசலுக்கு வழிவகுத்துள்ளது.

இதுபோன்ற தீவுகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் சிறந்த தரமான சேவைகளை வழங்க முடியும். சிகிச்சைக்காக வரும் மக்கள் வரிசையில் நிற்காது சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்படுவார்கள் என்று நம்புகிறேன். இது மக்களுக்குத் தேவையான சேவை - என்றும் அவர் இதன்போது கூறினார். (ஐ)

## 50ஆயிரம்...

கடன்களும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தில் இணைய விரும்பும் இளையோர், https://www.nextsrilanka.lk என்ற இணையத் தளத்தை அணுகுமாறும் கேட்கப்பட்டுள்ளது. கிராம மேம்பாடு, சமூக பாதுகாப்பு, சமூக வலுவூட்டல் அமைச்சுடன் இணைந்து சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த 5 வருடங்களில் 20 இலட்சம் குடும்பங்களுக்கு இந்த செயல் திட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

## பொலிஸ்...

சம்பவத்தில் பளை - வண்ணான்கேணியைச் சேர்ந்த சிறீதரன் காந்தன் என்ற குடும்பஸ்தரே புலனாய்வாளர்கள் என்று கூறப்படுவோரால் கடுமையாக தாக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

பாதிக்கப்பட்ட நபரின் நண்பர் ஒருவர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்பில் சமூக வலைத் தளங்களில் பதிவிட்டுள்ளார். அவர் பொலிஸ் விசாரணைக்கு அழைக்கப்பட் டுள்ளார். ஆனால், அவர் விசாரணைக்கு செல்லாமல் தலைமறைவாகிவிட்டார் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில், தலைமறைவானவர் தொடர்பில் தகவல் அளிக்க வருமாறு பாதிக்கப்பட்டவரிடம் தம்மை புலனாய்வாளர்கள் என்று அறிமுகம் செய்த - பொலிஸ் என்று அடையாளமிடப்பட்ட மேலங்கி அணிந்த நால்வர் அழைத்துள்ளனர். இதற்கு அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, அவரை வலுக்கட்டாயமாக மோட்டார் சைக்கிளில ஏற்றிச் சென்ற நால்வரும் அவரை தாக்கி விட்டு இடையில் இறக்கி விட்டுச் சென்றுள்ளனர் என்று பாதிக்கப்பட்டவர் கூறியுள்ளார்.

பளை பிரதேச மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நபரிடம் பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-07)

## பேச்சு....

குழுவில் அங்கம் வகிப்பவர்கள் தொடர்பான விவரம் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த ஏப்ரல் மாதம் நாடுகளுக்கு புதிய பரஸ்பர வரிகளை அறிமுகப்படுத்தினார். இதன்போது, இலங்கைக்கு 44 சதவீத வரி விதிக்கப்பட்டது. இலங்கை உட்பட பல நாடுகள் விடுத்த கோரிக்கையின்பேரில்

புதிய வரி நடைமுறைப்படுத்தப்படுவது 90 நாட்களுக்கு நிறுத்தப்பட்டது. இந்த நிலையில், கடந்த 9ஆம் திகதி இலங்கைக்கான தீர்வை வரி 30 சதவீதமாக குறைக்கப்பட்டது. இது எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தோட்ட...

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில் வெகுவிரைவில் தலையிட்டு ஜனாதிபதி தீர்வு வழங்குவார். இதற்காக உள்ளக மட்டத்தில் பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில் ஜனாதிபதி மிக விரைவில் நடவடிக்கை எடுப்பார். சிலவேளை அரசாங்கமும் இதற்குரிய தீர்வை வழங்கலாம் - என்றார். (ஐ)

## மூன்றாம்....

சுதந்திர வர்த்தக ஒப்பந்த பேச்சுகளைத் துரிதமாக மேற்கொள்வதற்கும் அவர்கள் ஒப்புக் கொண்டனர்.

நேர்மையான பரஸ்பர உதவி மற்றும் நீடித்த நட்பின் அடிப்படையில் மூலோபாய கூட்டுறவு கூட்டாண்மையை மேம்படுத்த இலங்கையுடன் இணைந்து பணியாற்ற சீனா தயாராக உள்ளது என்று சந்திப்பில் வாங் யி தெரிவித்தார்.

அத்துடன், கொழும்பு துறைமுக நகரம், அம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற பெரும் திட்டங்கள் இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும். பசுமை வலுசக்தி, டிஜிற்றல் பொருளாதாரம், நவீன விவசாயம் மற்றும் கடல்சார் பொருளாதாரம் போன்ற துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்க வேண்டும். சீனா - இலங்கை கடல்சார் ஒத்துழைப்பானது பரஸ்பர நன்மை பயக்கும் என்று கூறிய அவர், அது மூன்றாம் தரப்பினரை இலக்காகக் கொண்டதல்ல - மூன்றாம் தரப்பு அதில் தலையிடக் கூடாது என்றும் அவர் கூறினார்.

"சீனாவுடன் உள்ள உறவுக்கு, இலங்கை மிகுந்த முக்கியத்துவம் அளிப்பதாகவும் "ஒரே சீனா" கொள்கையை இலங்கை உறுதியாகக் கடைப்பிடிக்கிறது", என்று இதன்போது வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருந்தார்.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் ஆசியான் மாநாட்டில் பங்கேற்ற இருவரும் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசியிருந்தனர் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது. (ஐ)

## காபன்

எனினும், அரியாலை மனித புதைகுழி தொடர்பில் காபன் பரிசோதனையை பயன்படுத்த வேண்டுமா என்பதை நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும். இலங்கையிடம் இதற்கான தொழில்நுட்ப வசதிகள் இல்லாததால் மாதிரிகளை அமெரிக்கா அல்லது அவுஸ்திரேலியாவுக்கே அனுப்ப வேண்டும் - என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், அரியாலை மனிதப் புதைகுழி குறித்து இலங்கை தமிழ் அரசு கட்சி ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்காவுக்கு அனுப்பிய கடிதம் குறித்து கருத்து வெளியிட்ட அவர், "விசாரணைகளை முன்னெடுப்பதற்கு இலங்கை தமிழ் அரசு கட்சியின் கடிதத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ள விடயங்கள் பயனுள்ளவையாக - அர்த்தபூர்வமானவையாக அமையும் - என்றும் தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## காட்டுத் தீ பரவும் அபாயம்; 117 இற்கு அறிவிக்கவும்

கொழும்பு, ஜூலை 14

நாட்டில் நிலவும் வெப்பமான வானிலை காரணமாக பல்வேறு பகுதிகளில் காட்டுத் தீ பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக, பொதுமக்களை அவதானத்துடன் செயல்படுமாறு, அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

காட்டுத்தீ பரவல் தொடர்பான தகவல்களை, 117 என்ற துரித இலக்கத்துக்கு அறிவிக்க முடியும் எனவும் அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## மோ. சைக்கிள் - பஸ் விபத்து; இளைஞர்கள் இருவர் மரணம்

கொழும்பு, ஜூலை 14

தனியார் பேருந்தும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்தனர்.

கம்பஹா - மீரிகம - பஸ்யால பிரதான வீதியில் மல்லேஹெவ பகுதியில் இந்த விபத்து நேற்று இடம் பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரும் படுகாயமடைந்து வத்துபிட்டிவல மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர்.

உயிரிழந்த இருவரும் 25 முதல் 35 வயதுக்குட்பட்ட அமிதிரிகல, தெஹியோவிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

விபத்து தொடர்பாக பேருந்து சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

## சட்டவிரோதமாக கொண்டு வந்த பொருட்களுடன் நால்வர் கைது!

கிளிநொச்சி, ஜூலை 14

கிளிநொச்சியில் கடற்படை நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையின்போது சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட மருந்துகள், அழகு சாதனப் பொருட்கள், மசாலா பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டன. அத்துடன், 4 பேர் கைது செய்யப்பட்டும் உள்ளனர்.



கைப்பற்றப்பட்ட பொருட்களில் 300 கிலோ ஏலக் காய், 260 கிலோ மஞ்சள் தூள், 273 கிலோ வேர்கொம்பு மற்றும் மசாலா பொருட்கள், மருந்துகள், அழகு சாதனப் பொருட்களும் உள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் 39 - 49 வயது வரையான நால்வர் கைது செய்யப்பட்டனர். கைதான நால்வரும் கல்முனை, திருகோணமலை, புத்தளத்தை சேர்ந்தவர்களாவர்.

சான்றுப்பொருட்களுடன் கைது செய்யப்பட்ட நால்வரும் காங்கேசன்துறை-சுங்க திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## போதைப்பொருட்களுடன் 3 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஜூலை 14

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் பொலிஸார் நடத்திய தேடுதலில் போதைப் பொருட்களுடன் மூவர் கைது செய்யப்பட்டனர்.

அலுபோமுல்ல பொலிஸ் பிரிவின் மாலமுல்ல பகுதியில் 25 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவரும் 10 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவருமாக இருவர் கைது செய்யப்பட்டனர்.

கல்கிசை பொலிஸ் பிரிவின் இரத்மலானை பகுதியில் 11 கிராம் 790 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் 53 ஆயிரத்து 100 ரூபாய் பணத்துடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

மாகாண சபைகள் தேர்தல்:

# விரைவாக நடத்தும் முடிவில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது

### மாகாண சபைகள் அமைச்சர் சந்தன

கொழும்பு, ஜூலை 14

**மாகாண சபைகள் தேர்தல் எல்லை நிர்ணயம் குறித்து அமைச்சுகளின் ஆலோசனை குழு கூட்டத்தில் விரைவாக கலந்துரையாடப்படும். எல்லை நிர்ணய பிரச்னைகளுக்கு தீர்வு கண்டு மாகாண சபைகள் தேர்தலை விரைவாக நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம் என்று மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், பொதுநிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.**

மாகாண சபைகள் தேர்தல் குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற சபைகளை நியமிக்கும் பணிகள் நிறைவடைந்ததும் மாகாண சபைகள் தேர்தலுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகள் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் அப்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பைசர் முஸ்தபா சமர்ப்பித்த 2017ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் (திருத்த) சட்டமூலம் தோற்கடிக்கப்பட்டது. இந்த சட்டமூலம் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாகாண சபைகள் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டது.

மாகாண சபைகள் தேர்தலை புதிய தேர்தல் முறைமையில் நடத்துவதா அல்லது பழைய தேர்தல் முறைமையில் நடத்துவதா என்பதில் பெரும் சிக்கல் காணப்படுகிறது. மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதாயின், எல்லை நிர்ணய பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும். இவ்விடயத்தில் முரண்பாடற்ற வகையில் தீர்வு காண்பது அத்தியாவசியமானது. மாகாண சபைகள் தேர்தல்களின் எல்லை நிர்ணயம் குறித்து அமைச்சுக்களின் ஆலோசனைக் குழு கூட்டத்தில் விரைவாக கலந்துரையாடப்படும்.

அதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாகாண சபைகள் தேர்தல் குறித்து பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் வெகு விரைவில் கலந்துரையாடலில் ஈடுபடுவோம். மாகாண சபைகள் தேர்தல் குறித்து பாராளுமன்றத்தின் ஊடாக பொதுவானதோர் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும்.

அப்போதுதான் சட்டச் சிக்கலுக்கு தீர்வு காண முடியும். மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபைகள் தொடர்ந்து இயங்குவது ஜனநாயக முறைமைக்கு பொருத்தமானதாக அமையாது. ஆகவே, மாகாண சபைகள் தேர்தல் விவகாரத்தில் எதிர்க்கட்சியினர் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறோம் - என்றார். (ஐ)

# அமெரிக்க வரியை மேலும் குறைக்க இரண்டாம் கட்ட நடவடிக்கை ஆரம்பம்!

கொழும்பு, ஜூலை 14

இலங்கை பொருட்களுக்கு அமெரிக்க அரசாங்கம் விதித்துள்ள 30 சதவீத வரியை மேலும் குறைப்பதற்கான இரண்டாவது நடவடிக்கையை அரசாங்கம் தொடங்கியுள்ளது.

இலங்கைக்கு செலுத்த வேண்டிய வரி சதவீதம் அடங்கிய கடிதத்தை அமெரிக்க அரசாங்கம் வெளியிட்டமையைத் தொடர்ந்து, வரிகள் குறித்து விவாதிக்க நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் குழுவை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க சந்தித்தார்.

இதன்படி, இந்தக் குழு வரிகளால் பாதிக்கப்பட்ட ஏற்றுமதி துறைகளில் உள்ள சங்கங்கள், வணிக சமூகங்கள் மற்றும் நிபுணர்களைச் சந்தித்து விவாதிக்கவுள்ளது. தற்போது, அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மிகப்பெரியளவு உற்பத்தி ஆடைகளாகும். இந்தத் துறையில் உள்ள நிபுணர்கள் மற்றும் தொழில்முறை சமூகம் இந்த நாட்களில் குழுவைச் சந்தித்து அவர்களின் கருத்துகள் பெறப்படவுள்ளன.

இதன் பின்னர், அமெரிக்க அரசாங்கத்துடன் தொடர்புடைய அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்படும் என்று தொழில் அமைச்சரும் பொருளாதார விவகாரங்களுக்கான பிரதி அமைச்சருமான பேராசிரியர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஒகஸ்ட் 1ஆம் திகதிக்குள் வரி குறித்த இறுதி முடிவு செயல்படுத்தப்படும் என்பதால், இந்த விவாத நடவடிக்கை அடுத்த 18 நாட்களுக்குள் செயல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# தமிழ் தேசிய கட்சிகளின் ஒற்றுமை செயல் வடிவில் இருக்க வேண்டும்!

### சிறீதரன் எம். பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 14

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் ஒற்றுமை என்பது வெறுமனே பேச்சளவில் மாத்திரமின்றி செயல் வடிவத்தில் இருக்க வேண்டும். அதனை பரஸ்பரம் நிதானமாகவும் இதயசுத்தியுடனும் முன்னெடுக்க வேண்டும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக்குழுத்தலைவர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து செயல்படுவது தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பியின் அழைப்பு தொடர்பில் சிறீதரன் எம். பியிடம் ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

"அரசியல் தீர்வு விடயத்தில் சகல தமிழ்த் தேசிய கட்சிகளும் ஒன்றிணைந்துதான் பயணிக்க வேண்டும். தமிழர்களுக்கான நியாயமான சுயாட்சியை உறுதிப்படுத்துவதற்கு கூட்டுமுயற்சி அவசியம். இருப்பினும், கடந்த காலங்களில் தேர்தல் மேடைகளில் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் மிகமோசமான வார்த்தைப் பிரயோகங்களையும் கருத்துகளையும் வெளியிட்டதன் பின்னர், மீண்டும் தற்போது ஒற்றுமை முயற்சி பற்றிப் பேசுகையில், ஏற்கனவே பேசிய மோசமான பேச்சுகளே முன்னிலைப்படுத்தப் படுகின்றன.

எனவே, தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் ஒற்றுமை என்பது வெறுமனே பேச்சளவில் மாத்திரமன்றி, செயல் வடிவத்தில் இருக்க வேண்டும் என்றும், அதனை பரஸ்பரம் நிதானமாகவும் இதயசுத்தியுடனும் முன்னெடுக்கவேண்டும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.